"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

மலர் 87 | யாழ்ப்பாணம் 1962-ம் ஆ ஆடிமீ 8-ம் வ ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 10 | இதழ் 27

இலங்கையில் வெளிவரும்
ஒரேயொரு கத்தோலிக்க
தமிழ்வாரப் பத்திரிகை
சத்தியவேத
பாதுகாவலன்

இதனை ஆதரிப்பது
ஒரு கத்தோலிக்க தொண்டு

வருடசந்தா:

இலங்கை: ரூபா 6-00
வெளிநாடுகள்: ரூபா 6-50

# 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கம்

## அகில உலக கத்தோலிக்கருக்கு அருளப்ப பாப்பரசரின் தொனிக்கும் அழைப்பு

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கு எல்லாம் தயாராயிருக்கின்றன. இதுவே உங்கள் தருணம் என்று பாப்பரசர் வெளிப்படுத்தினார்.

"ஏழாவது ஆயத்தக்குழுவினரின் இந்த ஏழாவது பொதுக்கூட்டம், மனமகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் நடந்த இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் ஆயத்த காலத்தைப் பூர்த்தியாக்குகிறது" என்று உலகத்தின் பலபாகங்களிலுமுள்ள கருதினல்மார், மேற்றிராணிமார், வேதசாஸ்திரிகள் சமூகமளித்த பிரதம கூட்டமொன்றில், 23-ம் அருளப்ப பாப்பரசர் வெளிப்படுத்தியருளினார். இப்பொதுக்கூட்டத்தில் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைப் பூர்த்தியாக்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்தின் தீர்மானங்களில் இலங்கை அதிமேற்றிராணியாரான மகா வந்தனைக்குரிய தோமஸ் கூரே கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. ஒன்பது ஆயத்தக்குழுவினரதும் இரண்டு கருமசாலை இலாக்காக்களினதும் வேலை முடிவாயிற்று. அகில உலக மேற்றிராசனங்களிலுமிருந்து வந்து குவிந்த பல அறிக்கைகளின் சாராம்சத்தை அவர்கள் தொகுத்திருக்கின்றனர்.

இச்சங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் இடம் பெறக்கூடிய முறையில் இவ்வறிக்கைகளை மத்தியசங்கம் வரிசைப்படுத்தியிருக்கின்றது. இச்சங்கத்தில் பங்குபற்றும் எல்லாச்சபைப் பிதாக்களின் கைகளிலும் அச்சேற்றப்பட்ட இவ்வறிக்கை ஆடிமாத முடிவுக்குள் சென்றடைய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இத்துடன் மூன்றுவருட காலமாக அயராது செய்த வேலைகள் யாவும் முடிவடைந்து, ஐப்பசி 11-ம் திகதி நடைபெறவிருக்கும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஆரம்பத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் இடம்பெறும். பாப்பரசர் இக்கூட்டத்தில் பேசுகையில், சென்ற மூன்று ஆண்டுகளில் இப்பொதுச்சங்கத்திற்காக நடைபெற்ற ஆயத்தவேலைகளைப்பற்றி மேற்றிராணிமாருக்கு எடுத்து விளக்கினார். இம்மூன்று ஆண்டுகளில் ஆச்சரியத்துக்குரிய முறையிலும் மனவைராக்கியத்துடன் முன்மாதிரிகையான முறையிலும் அயராத முயற்சி நடைபெற்றிருக்கிறது. இனி வருகின்ற மூன்று மாதங்களிலும் இந்த அறிக்கைகள் செபத்துடனும், தியானத்துடனும் ஆழ்ந்து ஆலோசிக்கப்படும். இதில் விசேஷ பங்கெடுப்போருக்கு மேலதிகமாக வேலையிருக்கும். உலகத்தின் பலபாகங்களிலுமுள்ள சபைப்பிதாக்களுக்கும் இம்மூன்று மாதங்களும் எங்களோடு மிகவும் கூடுதலாக ஒத்துழைக்கவும், அவர்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையையும நிகழ்ச்சி நிரலையும் வாசித்து, தியானித்து யோசிக்கச் சந்தர்ப்பமளிக்கும்.

இம்மூன்று வருடங்களிலும் தங்கள் கஷ்டங்களைப் பாராமல் இக்கூட்டங்களில் கலந்துகொண்ட கருதினல்மார், மேற்றிராணிமார் வேதசாஸ்திரிகளுக்கு அருளப்பபாப்பரசர் விசேஷ நன்றி தெரிவித்தார்.

உலகத்திலுள்ள எல்லா மேற்றிராணிமாரும் தங்கள் ஞானப்பிள்ளைகளுக்கு இப்பொதுச்சங்கம சித்திகரமாய் நடந்தேறும் நோக்கத்துக்காகச் செபஞ் செய்யுமாறு ஊக்கிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இப்போது கிறிஸ்தவர்கள் தனித்தும் ஒருமித்தும் செய்யும் செபங்கள் ஏராளமானவையாயிருக்கின்றன என்றாலும், இன்னும் கூடுதலான செபங்களை விசேஷமாகப் பூசைப்பலி, குருக்களின் வேண்டுதல்கள் செபமாலை முதலியனவற்றை நாம் ஆசிக்கிறோமென்று கூறி முடித்தார்.

## இங்கிலாந்திலும் உவேல்சிலும் ஐந்தேகால் இலட். கத்தோலிக்கர்

1959 இல் இங்கிலாந்திலும் உவேல்சிலும் 5,250,000 கத்தோலிக்க மக்களிருந்தனர் என அப்போஸ்தொலிக்க தானுபதி ஒகர அதிமேற்றிராணி ஆண்டகை வெளியிட்டுள்ளார். 1951இன் குடிக்கணக்கெடுப்பின்படி 4,600,000 கத்தோலிக்கர் இருந்தனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 250 மேற்றிராசனக்குருக்களும் 79 சந்நியாசரும் ஏற்பட, கன்னியாஸ்திரிமாருக்கு 46 மடங்கள் திறக்கப்பட்டன.

720,000 மாணவர் கத்தோலிக்க பாடசாலைகளில் பயில, 200,000 மாணவர்கள் பிறபாடசாலைகளிற் படித்துவருகின்றனர்.

## பொதுச் சங்கத்தின்மீது உமது வரங்களைப் பொழிந்தருளும்

— வண. அருள் குழந்தைசாமி, யே. ச. —

திருச்சபையின் பொதுச் சங்கம் பரிசுத்த பாப்புவின் ஆணைக்கு இசைந்து அனைத்துலக மேற்றிராணிமார்களும் முறைப்படி கூடும் கூட்டமாகும்.

திருச்சபையின் தொடக்கத்தில் முதல் நூற்றாண்டுகளில் நடந்த திருச்சங்கங்களில் மேற்றிராணிமார்களும், பாப்பானவர் அல்லது அவருடைய பிரதிநிதியுமே கலந்துகொண்டனர். 325-ம் ஆண்டில் நடைபெற்ற முதல் நீஸ் பொதுச்சங்கம் 200 அல்லது, 250 மேற்றிராணிமார்களை மட்டும் கொண்டிருந்தது. 431-ம் ஆண்டு நடைபெற்ற எபேசுஸ் திருச்சங்கத்தில் 153 மேற்றிராணிமார்கள் மட்டுமே கலந்துகொண்டனர். கால்சிடன் பொதுச்சங்கத்தில் 500 மேற்றிராணிமார் இருந்தனர். 3-ம் கொன்ஸ்தாந்தின் திருச்சங்கத்தில் எண்ணிக்கை மீண்டும் குறைந்து 174 பேர் மட்டும் இருந்தனர்.

இவ்வாறு தொடக்கத்தில் மேற்றிராணிமார்கள் மட்டுமே திருச்சங்க உறுப்பினராயிருந்து வந்தார்களென்றாலும், காலச் சூழ்நிலைக்கேற்ப ஏனையோரும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டனர். மேற்றிராணிமார்கள் பலரில் இறையியல் அறிஞர்களில்லை. அவர்களில் சிலர் உலகப் போக்குள்ளவர்களாக இருந்ததுமன்றி அரசுக்கு மிகப் பணிந்து, அரசின் நல்லெண்ணத்தை நாடினவர்களாகவும் இருந்தனர். அக்காலத்தில் அர்ச். பெர்னார்டு இருந்த குளூனி சந்நியாச மடத்தைப் போன்றவை வேத நூலறிஞர்களைக் கொண்டிருந்தன. பாப்புவுக்குப் பக்கபலமாய் இருந்தன. பல்கலைக்கழகங்களும் துவக்கப்பட்டு அவைகளில் இறையியல் பேரறிஞர் பலர் இருந்தனர். எனவே, பொதுச் சங்கங்களுக்கு வந்த மேற்றிராணிமார்களுக்குத் துணையாகவும், வேத உண்மைகளை ஆழ்ந்தறியவும் இறையியல் அறிஞர்களும் அழைக்கப்பட்டனர். 1215-ம் ஆண்டில் நடந்த 4-ம் லத்தரன் திருச்சங்கத்தில் 412 மேற்றிராணிமார்களும் 800 அறிஞர்கள், மடாதிபதிகளும் இருந்தனர்.

நம் தந்தை 23-ம் அருளப்பர் ஐப்பசித்திங்கள் 11-ம் நாள் துவக்கவிருக்கும் 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் 2000 அல்லது, 2500 மேற்றிராணிமார்கள் கலந்துகொள்வார்கள் எனச் சொல்லப்படுகிறது. பொதுச் சங்கம் இவ்வுலகிற்கு அடுத்த காரியங்கள், அரசியல், வெறும் சமூக வாழ்க்கை ஆகியவற்றை ஆராய்வதற்குக் கூடுவதன்று. அது மக்கள் முடிவில்லா பேரின்ப வாழ்வை அடைய விசுவசிக்க வேண்டியது யாது, அனுசரிக்க வேண்டியது யாது என்பதை வாதாடி, ஆய்ந்தறிந்து, திருச்சபையின் பயனுக்குரிய தீர்மானங்களை எடுப்பதும் சட்டதிட்டங்களை ஏற்படுத்துவதுமாம். ஆகையால், திருச்சங்கத்தில் முக்கிய பங்கு அனைத்துலக மேற்றிராணிமார்களுக்கே.

[7-ம் பக்கம் பார்க்க]

## குருவானவர் நடாத்தும் சமூகநிலையத்தைப் பிரதமர் ஆரம்பித்துவைத்தார்

சுவிற்சர்லாந்து கத்தோலிக்க தொழிலாளர் இயக்கத்தினர் சேர்ந்து உதவிய பணத்தைக் கொண்டு அமைத்த சனசமூக நிலையமொன்றை டார்எஸ் சலாமில் திறந்துவைக்கத் தங்கனியீக்க பிரதமர் றஷிடி கௌவாவ வந்த பொழுது, ஆயிரக்கணக்கான தங்கனீயிக்க மக்கள் சமுகந்தந்தனர்.

இச்சனசமூக நிலையத்தில் கூட்ட மண்டபங்களும், வகுப்பறைகளும், நூல்நிலையமும், சிற்றுண்டிச்சாலையும் உள்ளன. இதற்குப் பின்னல் 20 அறைகள்கொண்ட இருவிடுதிகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இதற்கு அவுஸ்திரியர் பணஉதவியளித்தனர். பிரான்சீஸ்கு சபைச் சந்நியாசி ஒருவரே இதன் [illegible]க்கிருகின்றார்.

## யூதஇனத் தலைவர் வத்திக்கானுக்குச் சென்றார்

உலக யூதசங்கத்தின் தலைவர் அறிஞர் நாகூம் கொல்ட்மன் றோமைக்குச் சென்றபொழுது வத்திக்கானின் கிறிஸ்துவ ஒற்றுமைக் காரியாலயத் தலைவர் கருதினல் பெயாவைச் சந்தித்து, கத்தோலிக்க திருவழிபாட்டு முறைகளில் காணப்படும் யூதவிரோத கருத்துக்களை மாற்றுவதுபற்றிப் பேசிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது ஆபிரிக்கயாத்திரை—4

# சுதேசிகளின் சில அனுபவங்கள்

— வண. பிரான்சிஸ் ரிப்ளேஅடிகளார்

இவ்விதம் பாவியுள்ள தலைவர்கள், தொண்டர்கள் பொதுவுடைமைத் தலைவர்களை மிக எளிதாக, ருசிகரமாக அந்நாடுகளில் பரப்பி விடுகின்றனர். வேலைநிறுத்தம் முதலிய ஆயுதங்கள் மூலம் அரசாங்கத்தை ஆட்டிவைக் கின்றனர். இவர்களைக் கைதுசெய்து நடவடிக்கைஎடுப்பின் ஜனநாயகம், மக்கள்உரிமை என்றெல்லாம் குற்றங் கள் கிளம்பும். இவ்விதமே சிறிது சிறிதாக ஆட்சிபீடத்தைநோக்கி முன் னேறி வெகுசாதுரியமாகத் தங்கள் இலட்சியத்தை அடைந்துவிடுகின்ற னர் பொதுவுடைமைவாதிகள்.

பகலவன் குட்திசையை நோக்கி விரைந்துகொண்டிருந்தான். மணி யோசை எம்மை இரவுப்போசனத் துக்கு அழைத்தது. இதுபோன்ற உல்லாசப்பிரயாணக்கப்பல்களில் உப சாரங்கட்கும், நல்ல உணவுகட்கும் குறையிராது.

### 25 சித்திரை 1960

லண்டன்நகரிலிருந்து ஆயிரம்மைல் தொலைவில் பிரயாணம்செய்துகொண் டிருக்கிறோம். போர்த்துக்கால் துறை முன்னே ஒன்பதுமைல் தூரத்தி லுண்டு. சீதோஷ்ணம் 60 பாகை எனக் காட்டியது.

ஒரு தட்டிலிருந்து மறுதட்டை நோக்கி உல்லாசமாக நடந்துகொண் டிருந்தேன். ஓரிடத்தில் வண. றேயன் சுவாமியாரும், ஒரு பொலிஸ்காரரும் உரையாடுவதுகண்டு அங்கு சென் றேன். இருவரும் ஆபிரிக்காவில் பலவருடங்களைக் கழித்தவர்கள். விடு முறையில் தாய்நாடு சென்றுவிட்டு மீண்டும் ஆபிரிக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆபிரிக்கர்கள் ஜெர்மனியரின் ஆட் சியை அதிகம் சிலாகிக்கிறார்களென பொலிஸ்காரர் கூறினர். ஜெர்மனியர் வெள்ளையரை வெள்ளையராகவும்,கறுப் பர்களைக் கறுப்பர்களாகவும் வைத்தி ருந்தனர். பிரிட்டிஷரோ கறுப்பர் கட்கும் நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்து இரு சாதியினரையும் கலந்துவிட்டார்கள்என அவர் மேலும் குறிப்பிட்டார்.

வண. றேயன்சுவாமியார் இக் கூற்றை எதிர்த்தார். ஆபிரிக்க சுதே சிகள் பிரிட்டிஷார் நீதிசெலுத்தும் முறையை மெச்சுகிறார்களென அவர் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டினர். ஒரு மனிதன் குற்றவாளியென நிரூ பிக்கப்படும்வரை அவனுக்கு எல்லாச் சுதந்திரங்களையும் வழங்கும் பிரிட்டிஷ் முறையை அவர்கள் வரவேற்கிறார்க ளெனவும் அவர் குறிப்பிட்டார். இச் சமயத்தில் பொலிஸ்காரர் தமது அனுபவமொன்றைக் குறிப்பிட்டார். அந்தப் பொலிஸ்காரரிடம் ஒருநாள் சுதேசியொருவர் வந்தார். தம்மை ஒரு குருவானவர் அடித்துவிட்டதா கப் புகார் செய்தார். எனவே, பொலிஸ்காரர் குருவிடம்சென்று விசா ரணைசெய்தார். இச்சுதேசி திவ்விய பூசைநேரத்தில் ஆலயத்துக்குள் சென்று தானே யேசுக்கிறிஸ்துநாதர் எனக் கலாட்டாசெய்ததாக அங்கு தெரியவந்தது.

வண. றேயன்சுவாமியாரும் வெகு காலத்துக்குமுன் தங்கநயிக்கா ஜெர் மனியரின் காலனியாகவிருந்தபோது நடைபெற்ற சில சம்பவங்களைக் குறிப் பிட்டார். அக்காலத்தில் இளைஞ ஞெருவனுக்குத் திருமணம் நிறைவேற வேண்டுமாயின் அவன் ஒரு மனித காதைக் கொண்டுவருதல் வேண்டும். இதற்காகப் பலதடவைகளில் கொலை களும் நடந்தனவாம். எனவே, பின் னர் ஜெர்மனியர் பல கொடும் சட்டங் களினுல் இவ்வழக்கத்தை நிறுத்த வேண்டியதாயிற்று.

ஒருமுறை பயங்கர பாதகனெருவன் மரண தண்டனை விதிக்கப்பட்டான் இனிமேலும் இவ்வித அட்டூழியங்கள் நடைபெறுதிருக்க அவனைப் பகிரங்க மாகத் தூக்குமரத்தில் தொங்கவிடுவ தென ஜெர்மனியர் தீர்மானித்தனர். இக்காட்சியைப்பார்க்க மக்கள்கூட்டம் திரண்டுவந்தது. குற்றவாளி தூக்குக் கயிற்றில் தொங்கியபோது சூழவிருந் தோர் ஆனந்தக்கூத்தாடி மகிழ்ச்சி யடைந்தனர். அவர்கள் அவ்விடத்தை விட்டகலுமுன் அடுத்த தூக்குத்தண் டனை எப்போதெனவும் விசாரிக்க மறக்கவில்லையாம்.

மாலை 7-15 பணியளவில் சென். வின்சென்ற்குடாவைத் தாண்டிச்சென் றோம். ஜிபிரோல்ரர் 190 மைல் தொலைவில் உள்ளது. செண். வின் சென்ற், கடற்படைவரலாற்றில் சிறப் புப்பெற்ற குடாவாகும். 1693-ல் ஒல்லாந்த ஆங்கிலேய கடற்படைகள் பிராஞ்சிய கடற்படையால் தோற் கடிக்கப்பட்டன. 1780-ல் ஸ்பானிய கடற்படை அட்மிரல் ரோட்ணியால் வெல்லப்பட்டது. பதினேழுவருடங் களின் பின்னர் அட்மிரல் ஜேவிஸ் இங்கு சாதித்த வெற்றிகட்காகச் சென். வின்சென்ற் பிரபுஎனக் கௌர விக்கப்பட்டார்.

(வளரும்)

> அடுந்த வாரம் ஜிபிரோல்ரர் துறையில் ரிப்ளே அடிக ளார் இறங்கி அவ்வூரைச் சுற்றிப்பார்த்த சுவையான சம் பவங்களை வர்ணிக்கிருர். படிக்கத் தவருதீர்கள்.

# ஆளும் அழகிகள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து, அங்குள்ள மக்களின் மதிப் பைப் பெற்ருள்.

அப்பா: இந்தியாவுக்கு வந்தபோது ஒரு சுவையான நிகழ்ச்சி நடைபெற் றது. ஒரு பிரதான வீதியில் ஜாக்கு லினைப் பார்ப்பதற்காகக் கூடிய கிரா மத்தவர்களில் ஒருவன் அவளைக் கண்ட தும் அடபரிதாபமே, அந்தக் கிழவ னுக்கா இந்தக் கிளியைக் கலியாணம் செய்துகொடுத்தார்கள் என்று பிரலா பித்தான். அங்கு நின்ற பத்திரிகை நிருபர்கள் விசாரித்தபோது இரண்டு வருடங்கட்கு முன்னர் இந்தியாவுக்கு விஜயம்செய்த அமெரிக்க அதிபர் ஐசன்கோவரின் மனைவி என அவன் எண்ணிக்கொண்டதாகத் தெரியவந் தது. ஐசன்கோவர் இளைப்பாறிவிட் டார். இப்போது கென்னடி என்ற இளைஞர்தான் அமெரிக்க அதிபர். அவரின் மனைவியே ஜாக்குலின் என பத்திரிகை நிருபர்கள் விளக்கியபின் தான் அக்கிராமத்தவன் மகிழ்ச்சி கொண்டானும்.

அம்மா: இப்படிச் செல்லுமிட மெல்லாம் மக்களை வசிகரிக்கும் பண் புள்ள அந்தப் பிள்ளையை நாங்கள் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லையே.

அகஸ்ரின்: பயப்படாதீர்கள். இவ் வருட முடிவில் கென்னடிதம்பதிகள் மீண்டும் இந்தியா[illegible] கள். அப்போது [illegible] கூடும்.

# யேசுவின் திருஇரத்தத்தின் மாதம்

வைகாசிமாதத்தைக் கத்தோலிக்க வையகம் முழுவதும் கர்த்தரின் அன் னையாம் மாமரியாயின் வணக்கமாத மாக அனுசரிப்பர். ஆனிமாதத்தை யேசுநாதரின் திருஇருதயத்தின் வணக்கமாதமாக அனுசரிப்பர். ஆனல் ஆடிமாதமோ திவ்விய மீட்பராகிய யேசுவின் திரு இரத்தத்தின் வணக்க மாதமாக அனுசரிக்கப்படுகிறது.

திரு இரத்தத்தின் மகிமையைப் பற்றியும் அதன் வலிமையைப்பற்றி யும் திருச்சபையின் முதல் அப்போ ஸ்தலரான அர்ச். இராயப்பர் திருச் சபைக்குத் தாம்எழுதிய முதல்நிரு பத்தில் மிகவும் அழுத்தந்திருத்தமாக எடுத்து விளக்கியிருக்கிறார். "அழி வுள்ள பொன்னினுலும் வெள்ளியினு லும் நீங்கள் இரட்சிக்கப்படாமல் மாசு மறையற்ற ஆட்டுக்குட்டிக்கொப்பாகிய கிறிஸ்துநாதருடைய விலையேறப்பெற் ற இரத்தத்தினுல் இரட்சிக்கப்பட்டி ருக்கிறீர்கள் (1, 1 வச 18-19). இக் கருத்தையே அர்ச். சின்னப்பரும் கொரிந்தியருக்கு எழுதிய நிருபங்க ளில் வெளியிட்டிருக்கிறார் (I. 6,20; 1, 7, 23).

திரு இரத்தத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய ஆராதனையும் வணக்கமும் ஆதிக்கிறிஸ்தவர்கள் காலத்திலிருந்தே செலுத்தப்பட்டு வந்திருந்தபோதிலும் 1849-ம் ஆண்டு ஆவணிமாதம் 10-ந் திகதியில்தான் ஒன்பதாம் பத்திநாத பாப்பரசர் திருஇரத்தத்தின் திருநாள் முழுத்திருச்சபையாலும் கொண்டா டப்படவேண்டிய ஒரு திருநாளென்று பிரகடனப்படுத்தினர். அதன்பிரகாரம் வருடாவருடம் ஆடி முதலாந்திகதி அத்திருநாள் கொண்டாடப்படுகிறது.

இரட்சணியத்தின் 19-ம் நூற்றாண் டைக் கொண்டாடுமுகமாக 1933-ம் ஆண்டில் பாப்பரசராயிருந்த பதினெ ராம் பத்திநாத பாப்பரசர் திருஇரத் தத்தின் திருநாளை முதலாம்வகுப்புத் திருநாளாக உயர்த்தினர்.

இப்போது திருச்சபையை ஆண்டு நடத்திவரும் 23-ம் அருளப்ப பாப்பர சரால் 1960-ம் ஆண்டு ஆனிமாதம் 30-ந் திகதி வெளியிடப்பட்ட "ஆதியி லிருந்து" என்ற சுற்று நிருபத்தில் திரு இரத்தத்தின் ஆராதனையை எடுத்து நன்கு விளக்கியிருக்கிறார். அதோடு நின்றுவிடாது திருஇரத்தத்தின் பிரார்த்தனையைத் திருத்தி அமைத்து அவருடைய மிகவும்விலையேறப்பெற்ற திருஇரத்தம் ஸ்துதிக்கப்படுவதாக" என்ற செபத்தையும் ஆசீர்வாதத்தின் பின் பொதுவாகச் சொல்லப்படும் ஸ்துதிகளுள் சேர்த்தமைத்தார்.

யேசுவின் விலைமதிக்கப்படாத திரு இரத்தம் சகல மனிதர்களுக்காகவும் ஏழு பிரதான சந்தர்ப்பங்களில் சிந்தப் பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

முதலாவது: யேசுக்கிறிஸ்துநாதர் பிறந்த எட்டாம் நாளில் யூதரின் சமய ஆசாரப்படி அவருக்கு விருத்தசேத னச்சடங்கு நடைபெற்றது. பால்ய பருவத்திற்றனே சிந்திய திரு இரத் தம் முப்பத்துமூன்று வருடங்களுக் குப்பின் தம்மக்களின் இரட்சணியத் திற்காகச் சிந்திய திரு இரத்தத்திற்கு ஓர் அறிகுறியாக இருந்தது எனலாம்.

இரண்டாவது: யேசுநாதர் யெத்செ மனி தோட்டத்திலே இரத்தவியர்வை சிந்தித் தமது திரு இரத்தத்தை மனி தரின் இரட்சணியத்துக்காகச் சிந்தி னர். மனிதரின் கணக்கற்ற பாவங் கள், கொடுமைகள் நன்றியறியாமை, அசமந்தகுணம், ஆத்துமாக்கள் ஆயி ரக்கணக்கில் நரகத்தில் விழுதல், பா வங்களின் அளவற்ற எண்ணிக்கை என் பனவே இவ்விரத்தச் சிந்துதலுக்குக் காரணமாயிருந்தன என்று வேதபார கர் எடுத்துக்கூறுவர்.

மூன்றாவது: பிலாத்துஸ் என்பவ [illegible] கற்றூணில் கட் [illegible]போது யேசுநாதர் அளவுகடந்த திருஇரத்தத்தைச் சிந்தி னர். ஐயாயிரத்துக்கு அதிகமான அடிகள் அவர்உடலில் விழுந்தன. உச்சிதுவங்கி உள்ளங்கால் மட்டும் இரத்தப்பிரவாகமாகக் காட்சியளித் தார். மனிதரின் சரீரத்தின் அவய வங்கள் ஒவ்வொன்றாலும் அவர்கள் செய்யும் பாவங்களுக்குப் பரிகாரம் நித்தியபிதாவுக்குச் செய்யவே இவ் வாறு இரத்தஞ் சிந்தினர் என்று கூறப்படுகிறது.

நாலாவது: முள்முடியை யேசுக் கிறிஸ்துநாதரின் சிரசில்வைத்து யூதர் அழுத்தியபொழுது அளவற்ற திரு இரத்தத்தை அவர்சிந்தினர். அம்முடி யில் எழுபத்திரண்டு கூரிய நீண்ட முட்கள் இருந்தனஎன்று கூறப்படு கிறது இவ்வாறு எழுபத்திரண்டு துவாரங்களால் (காயங்களால) நம தாண்டவர் இரத்தஞ்சிந்தியது நமது தலையான பாவமாகிய அகங்காரத்துக் குப் பரித்தியாகமாகவேஎன்று எடுத்து விளக்கப்படுகிறது.

ஐந்தாவது: மூவைந்தடி நீளமான சிலுவையைத் தோளிற்சுமந்துகொண் டு யேசுநாதர் ஜெருசலேமிலிருந்து கல்வாரிமலைமட்டும் சென்றபோது அவர் நடந்தபாதைபூராக அவருடைய திருஇரத்தத்தால் நனைந்திருந்தது.

ஆருவது: யேசுக்கிறிஸ்துநாத ருடைய வஸ்திரங்களை யூதர் உரிந்த பொழுதும், அவரைச் சிலுவையிற் கிடத்தி இருப்பாணிகளால் அறைந்த பொழுதும், அவர் வானத்துக்கும் பூமிக்குமிடையில் மூன்றுமணிநேரம் தொங்கியபொழுது அளவற்ற திரு இரத்தம் சிந்தப்பட்டது.

ஏழாவது: யேசுக்கிறீஸ்துநாதரு டைய விலாவை ஒரு செந்தூரியன் ஈட்டியால் குத்தித் திறந்தபோது அவரிடமிருந்த கடைசி இரத்தமும் தண்ணீரும் பாய்ந்தோடிற்று.

இவ்வாறு மக்களின் ஈடேற்றத்துக் காகச் சொரியப்பட்ட திவ்வியஇரத் தத்துக்கு நாம் இம்மாதத்தில் விசேஷ மாகச் செய்யக்கூடிய ஆராதனைகள் பலவுள. ஆனாலும், மூன்று பிரதான ஆராதனைகளை ஈண்டு குறிப்பிடலாம்

**முதலாவது:** அநுதின பூசைப்பலி. பூசைப்பலியும் கல்வாரிப்பலியும் ஒன்று யிருப்பதின் நிமித்தம் பூசைப்பலியில் நாம் பங்குபற்றுவது மிகவும்பொருத்த மானதே.

**இரண்டாவது:** தேவநற்கருணை உட்கொள்ளல். என் சரீரத்தைப் புசி யாதவனும் என் இரத்தத்தைப் பானம் பண்ணுதவனும் சீவனுள்ளவனுயிருக்க மாட்டான் என்று யேசுக்கிறிஸ்து நாதர் தாமே திருவுளம்பற்றினுர். ஆகவே, அவரை நாம் அடிக்கடி தேவ நற்கருணையில் பெறப் பார்க்கவேண் டும்.

**மூன்றுவது:** செபங்களும் தியா னங்களும் செய்தல். திருஇரத்தத் தின் பிரார்த்தனை, வியாகுலகாரணிக் கங்களைப்பற்றிய தியானங்கள், திரு இரத்தத்தைப்பற்றிய செபங்கள், நவ நாள் ஆராதனைகள் முதலியன இம் மாதத்தில் மிகவும் பொருத்தமான வையே. அகில உலக கத்தோலிக்க மக்களும் திருஇரத்த ஆராதனையை மேற்கொள்ளவேண்டுமென்று திருச் சபை ஆசிக்கிறது. பாப்பரசர்கள் பணிக்கின்றனர்

பி. ச.

---

● கத்தோலிக்க சமயமல்லாத ஜப் பானிய அரசாங்கம் அங்கு ஓசாக்கா நகரிலே உபதேசிமாருக்கென ஓர்புதிய கத்தோலிக்க கல்லூரியைநிறுவ ஊக் கம்அளித்ததுடன் அங்கீகாரமும் அளித்திருக்கின்றது. இந்த எய்ஜிக் கல்லூரிப் பட்டதாரிகள் கத்தோலிக்க பாடசாலைகளும், கத்தோலிக்க சமயத் தைச்சாராதபாடசாலைகளுமான சகல பாடசாலைகளிலும் சமயத்தைப் படிப் பிக்க அதிகாரபூர்வமாகத் தகுதிபெற்ற வர்களாய் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## தேசீய ஒருமைப்பாடு

"பெரும்பான்மைச் சமூகத்தினர் சிறுபான்மைச் சமூகத்தினரின் நலன்களைக்கவனித்து, அவர்களின் நம்பிக்கையைப் பெற்றுற்றுன் இந்நாட்டில் தேசீயஒருமைப்பாடு நிலவமுடியும்; இந்நாட்டின் அபிவிருத்திக்குத் தேசீயஒருமைப்பாடு மிக அவசியமாகும்; பெரும்பான்மைச்சமூகத்தினர் சிறுபான்மையினருக்கு வேண்டியபாதுகாப்புகளைச் செய்துகொடுக்க வேண்டும்; ஆனல், நமதுநாட்டிலே தலைவர்கள்சிலர் தங்கள்நலன்கருதித் தங்கள்கையிலேயே ஆதிக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத் தேசீய ஒருமைப்பாடு என்னஎன்பதை அறியாது கடமைபுரிகின்றனர்; சிறுபான்மையினர் சிங்களம் கற்கவேண்டுமென அவர்களைக் கட்டாயப்படுத்தப்படாது; சிறுபான்மையினருக்குச் செய்து கொடுக்கும் பாதுகாப்பின்மூலமாகவே தேசீயஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்" என அன்றுகொழும்பிலே டக்றர் என். எம். பெரேரு நிகழ்த்திய ஒருசொற்பொழிவில் கூறியிருக்கின்ருர்.

## இந்தியர் பிரச்சினை தீரஉபாயம்

இந்தியபிரச்சினையைத் தீர்க்கும் ஒரேயொருவழிவகை, இந்தியவம்சாவழியினரான இலங்கைத் தமிழருக்கும், சிங்களவருக்குமிடையே கலப்புமணங்கள் நடைபெறுமாறு தூண்டி ஊக்கப்படுத்தி விடுவதேயாகும்; இது செய்யப்படின் ஒன்று அல்லது இரண்டு தலைமுறையில் இந்திய தமிழர்கள் சிங்களசாகியத்துள் சிங்களவர்களாய்ப் போய்விடுவார்களென அன்று குட்டாப்பிட்டித் தோட்டப்பாடசாலையில் நடைபெற்ற சுகாதாரவாரவிழாவிலே பெல்மதுளை எம். பி. திரு. எம். கருணசேன பேசியிருக்கின்ருர்.

## பாடசாலை நாளாகுமா?

அடுத்துநிகழும் 1963-ம்ஆண்டின் வருடப்பிறப்புதினம் பாடசாலைநடைபெறும் ஒருநாளாகும்போல் இருக்கிறது. கிறிஸ்மஸ் விடுமுறைக்குப்பின் மார்கழிமாதம் 31-ந்திகதியன்று திரும்பவும் பாடசாலைகளைத்திறக்க வேண்டுமெனப் பரீட்சார்த்தமாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாய் அரசாங்க பாடசாலைகளினதும், வித்தியாதிபதியின் முகாமையிலுள்ள பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு வித்தியாதிபதி அறிவித்திருக்கின்ருர். ஜி. சீ. ஈ., எச். எஸ். சி., சர்வகலாசாலைப்பிரவேசப் பரீட்சைகளுக்குப் பாடசாலை மண்டபங்கள் தேவைப்படுவதால் கார்த்திகை30-ந்திகதியன்று பாடசாலைகள் மூடப்படுமென்று வித்தியாதிபதியின் அறிவித்தல் தெரிவிக்கின்றது. கட்டணம்அறவிடும் தனிப்பட்ட பாடசாலைகளும், கட்டணம் அறவிடாத பாடசாலைகளும் வித்தியாதிபதியின் இந்த உத்தரவாலே பாதிக்கப்படமாட்டா.

## பீடிப்புகையிலைச் செய்கை

யாழ்ப்பாணப்பகுதியில் பீடிப்புகையிலைச்செய்கையை விருத்திசெய்யக் கமத்தொழில்பகுதி திட்டமிட்டிருக்கின்றது. இங்கே சிலர்முயன்று நடத்தியபீடிப்புகையிலைச் செய்கை வெற்றியளித்து மிகுந்தஇலாபம் கொடுத்திருக்கிறது. கமத்தொழில்பகுதி நடத்தியப்ரிசோதனையிலிருந்து இங்கே பீடிப்புகையிலைச்செய்கையை நன்ருய் விருத்தியாக்க முடியுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. மலையாளப்புகையிலையால் ஏற்பட்டுள்ளகஷ்டத்தைப் பீடிப்புகையிலைச்செய்கையால் நிவிர்த்தி செய்ய முடியுமென நம்பப்படுகிறது.

## கல்லூரி அதிபரின் பொன்னுரை

"நமதுகல்விஸ்தாபனங்களில் எமது தேசீயமொழிகளான சிங்களத்துக்கும், தமிழுக்கும் அவைகளுக்குரியஇடம் அளிக்கப்படவேண்டும்; அற்பத்தனமான சகலதப்பெண்ணங்களையும் நாம் கைவிடவேண்டும்; எமதுசகோதரர்களான தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர்களின் பிணங்களின்மீதே சிங்களச் சமுதாயம் சுபீட்சமாக வாழமுடியுமென்ற தப்பெண்ணத்தை நாம் நீக்கிவிடவேண்டும்; ஏனையமதங்களை ஒழித்துக்கட்டாமல் புத்தமதத்திற்கு அதற்குரியஇடத்தைக் கொடுக்கலாம் என்பதை நாம்உணரவேண்டும்" என்று சென்ற2-ந்திகதியன்று, காலி சென்ற் அலோஷியஸ்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழாவில் உரைநிகழ்த்திய போது காலி, மஹிந்தாக்கல்லூரி அதிபர் திரு. ஈ. ஏ. வீரசூரியா கூறியிருக்கின்ருர்.

## 120கோடிரூபா வேண்டும்

தேசீயகல்விக்கமிஷனின் இடைக்கால அறிக்கையிலுள்ள சிபாரிசுகளைக் கல்விப்பகுதி ஆராய்ந்துபார்த்ததில் பாடசாலைகளைத் தாம்பிரிக்கும் சிபாரிசைமாத்திரம் நடைமுறைக்குக் கொண்டுவர 120கோடிரூபாசெலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 900கல்விநிலையங்களின் தரத்தை உயர்த்த 90கோடிரூபா செலவேற்படும். 900கல்விநிலையங்களினதும் தரத்தைஉயர்த்தி அவற்றிலே விஞ்ஞானஆய்வு கூடங்களை அமைத்து, விஞ்ஞானஆசிரியர்களைப் பயிற்றிநிய மிக்க மேலும்குறைந்தபட்சம் 30 கோடிரூபா செலவாகுமெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஆகவே மொத்தமாக 20கோடிரூபா தேவைப்படுகிறது.

## புதிய தொழிற்சாலை

யாழ்ப்பாணத்திலே பழங்களைப் பதப்படுத்தும் ஒருதொழிற்சாலை ஒன்றைஇலட்சம்ரூபாசெலவில் அமைக்கப்படவிருக்கிறது. இதிலே வடபகுதியில் கிடைக்கும் பழங்களில் முக்கியமாக வாழைப்பழம், மாம்பழம் முதலியவைகளைப் பதப்படுத்தி ஜாமையும், பலவகைப்பழரசங்களையும் தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தொழிற்சாலை சுன்ணுகத்தில் அமைக்கப்படும்போல் இருக்கிறது. இதற்கானஏற்பாடுகளை வடபகுதி விவசாயஉற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் செய்துவருகிறது.

## இளம்பிள்ளை வாதநோய்

யாழ்ப்பாணத்திலே இளம்பிள்ளை வாதநோய்கண்ட 180பேரில் இது வரை13பேர் இந்நோயினுல் இறந்துபோயினர். சுமார்ஒன்றரைஇலட்சம் பேருக்கு இந்தநோய்த் தடுப்புமருந்து செலுத்தும்வேலை நடைபெற்றுவருகின்றது. யாழ்ப்பாண அரசினர்பெரிய ஆஸ்பத்திரியிலே இளம்பிள்ளைவாத நோயர்ளர்வாட்டிலே சிகிச்சைபெற்றுவந்த 80பேரில் 20பேர்சுகமடைந்து வெளியேறிவிட்டார்கள்.

## புரட்சிச் சதிவழக்கு

சென்றதைமாதம் 27-ந்திகதியன்று நடைபெற்றதெனச் சொல்லப்படும் புரட்சிச்சதிவழக்குச் சம்பந்தமாய்ச் சந்தேகத்தின்மீது காவலில்வைக்கப்பட்டுள்ள 23பேரும் தங்களைவிசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள மூன்று நீதியரசர்கள் முன்பாகச் சமன்ஸ் பேரில் இம்மாதம், 8-ந்திகதி புதன் கிழமை நீதிஸ்தலத்தில் ஆசர்செய்யப்படுவார்கள். இவர்களை விசாரணைசெய்வதற்கெனக் கடற்படைத் தலைமை ஸ்தானத்தில் [illegible] டவிதமாய் [illegible]

# உருளும் உலகில்

## ● பத்திமாபதி

சென்றவருடத்தில் போர்த்துக்கீசிய பத்திமாபதியில் யாத்திரைசெய்து திவ்வியநன்மை பெற்ருேர் தொகை 525,000 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் சராசரியாகத் தினம் ஒன்றுக்கு 12 பூசைகள் செலுத்தப்பட்டனவாம்.

## ● அவுஸ்திரேலியா

ஆபாச கருத்துகளையும் நாத்திகக் கொள்கைகளையும் பொதிந்துள்ள இலக்கியங்களையெல்லாம் அவுஸ்திரேலியாவில் அனுமதிப்பதுபற்றி சுங்க இலாகாவினருக்குப் பிரிஸ்பேண் கத்தோலிக்க தொழிலாளர் சங்கத்தினர் ஆட்சேபனை தெரிவித்திருக்கின்றனர்.

## ● வத்திக்கான்

610,000 பேருக்குமதிகமானேர் 1961-ம் ஆண்டில் வத்திக்கான் நூதனசாலையைத் தரிசித்திருக்கின்றனர்.

## ● ரிஸ்மண்ட்

யூனியன் ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் ஸ்தாபனத்தின்தலைவராகவிருந்து காலஞ்சென்ற திருமதி புளோரன்ஸ் லோவ்லர் அமரிக்காவின் ரிச்மண்ட் மேற்றிராசனத்துக்கெனத் தனது மரணசாசனத்தில் 50,00,000 டலர்களை அதாவது சுமார் 2,50,00,000 ரூபாய்களை ஒதுக்கியிருக்கிருள்.

## ● இந்தியா

ஆந்திரா இராச்சியத்துக்கென ஒரு குருமார் பயிற்சிக்கழகத்தை நிறுவும் வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. அடுத்த ஆண்டில் இக்கழகம் பயிற்சியளிக்கத் தொடங்கும்.

## ● கொங்கோங்

கொங்கோங் காலனியிலுள்ள 1,60,000 கத்தோலிக்கர்கட்கென 25தேவாலயங்களும் 43 சிற்றுலயங்களும் இயங்கிவருகின்றனவாம்.

## ● சுவிற்செலாந்து

பாப்பரசரின் காவலர்களாகப் பணிசெய்யும் சுவிஸ்படையணியினரின் தலைமைத்தாபனம் சுவிற்செலந்தில் கத்தோலிக்க வாலிபர்களிடையே தங்கள் படையணிக்கு ஆள்தேடும் அலுவலொன்றைத் தொடங்கியுள்ளது. அடுத்துவரும் வத்திக்கான் பொதுச் சங்கத்தின்போது காவலர்கள் மேலதிகமாகத் தேவைப்படுவர்.

## ● இத்தாலி

இத்தாலிய கத்தோலிக்க திரைப்பட நிலையத்தினர் கடந்த வருடத்தில் இத்தாலியெங்கிலும் திரையிடப்பட்ட திரைப்படங்களில் 50 சதவிகிதமானவற்றை ஆபாசமானவையென்று விமர்சித்திருக்கின்றனர்.

## ● பிரித்தானியா

பிரபல முன்னுள் கம்மியூனிஸ்தர் டக்ளஸ் கைட்டின் புதல்வி ரோவ்ணு கைட் தனது 19வது வயதில் துறவறம் விரும்பிக் கன்னியர் மடத்தில் சேர்ந்திருக்கிருளெனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்புதல்விக்கு ஆறுவது வயது நடக்கும்போதுதான் பிரபல பொதுவுடைமைவாதியாக விளங்கிய தந்தை டக்ளஸ் கைட் பிரித்தானியாவில் வெளியாகும் தொழிலாளர் தினத்தாள் என்ற கம்மியூனிஸ்த பத்திரிகையின் பத்திராசிரியர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் விலகினுர்.

## ● டோமினிக்கன் குடியரசு

புதிய டோமினிக்கன் குடியரசில் பாப்புவின் அப்போஸ்தாலிக்க பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள அதிமேற்றிராணியார் இம்மானுவல் கிளாரிசோ ஆண்டகை அண்மையில் தமது பத்திரங்களை டோமினிக்கன் மேலதிகாரிகளிடம் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுள்ளார்.

## ● சின்சின்னட்டாய்

அண்மையில் காலஞ்சென்ற 102 வயதான கன்னி மேரி ஒவ் சென் கென்றி, அமரிக்காவிலேயே மிக அதிக காலம் துறவற அந்தஸ்தில் காலத்தைக் கழித்தவர்களுள் ஒருவர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கன்னிகை 84 வருடங்கள் துறவியாகவிருந்திருக்கிருர்.

## ● இந்தியானுபோலிஸ்

இந்தியானுபோலிஸ் அதிமேற்றிராசனத்தில் கத்தோலிக்க வானெலிச் சேவையொன்று இயங்கிவருகிறது. இச்சேவையின் நிகழ்ச்சிகளில் தற்போது செபமாலையொன்றும் ஒலிபரப்பப்படுகிறது. வத்திக்கான் சங்க சித்திக்காக இச்செபமாலைகள் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. தினசரி ஒலிபரப்பாகும் இச்செபமாலையில் திரளானேர் கலந்துகொள்ளுகிருர்களாம்.

தொகுப்பு :—மடோணு.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணுர்பண்ணை மேற்கு
விசுவலிங்கம் சரவணமுத்து
— வழக்காளி.

எதிராக

வண்ணுர்பண்ணை மேற்கு
தம்பிப்பிள்ளை ஆறுமுகம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 4199-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1962-ம்ஸ்ல ஆவணிமீ 11-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 9½ மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் ரூபா8,355. இதில் ரூபா 7,000-க்கு 17-8-61 திகதி தொடக்கம் 14-11-61 திகதிவரைக்கும் 8 வீதவட்டியும், பின் 15-11-61 திகதி தொடக்கம் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், இதில் ரூபா 2,000 கொடுபட் [illegible] 14-11-61 திகதி கோட்டுச்செலவு [illegible] 281-07 சதம்.

### காணி விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணுர்பண்ணை கோவிற்பற்று, வண்ணுர்பண்ணை வடமேற்குஇறை, மூன்ரும்விளாத்தியடி நிலப்பரப்பு 1, குளி $5\frac{1}{5}$. கல்வீடும்,கிணறும். கிழக்கு எல்லைக்காணியிலிருக்கும் கிணற்றில் [illegible] பங்கும், துர்வை வழிவாய்க்காலும். எல்லை: கிழக்கு—அருள்பிரகாசம் பெண் சரஸ்வதிக்குரிய ஆதனம். வடக்கு—ருேட்டு. மேற்கு—ஆறுமுகம் பெண் சரஸ்வதிக்குரியஆதனம். தெற்கு—முருகேசு சிவசம்புவுக்குரிய [illegible]தனம். இதடங்கலும். விற்கப்படும் பதிவு இல. D.$\frac{266}{121}$.

ந. ஆறுமுகம்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

சித்தங்கேணி,
1-7-1962.


ஒருவன் துன்பப்படுகையில்
அவனைப் பரிகாசம் பண்ணுதே;
ஏனெனில், தாழ்த்துகிறவரும்,
உயர்த்துகிறவருமான
சகலமும் பார்க்கும் கடவுள்
ஒருவர் இருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 8 | ஞா. | இஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின் 4-ம்ஞாயிறு (வி.ம.) | ப |
| 9 | தி. ம | காலதினம் | ப |
| 10 | செ. | ஏழு சகோதரர் வேதசாட்சிகள் | சி |
| 11 | பு. ம | காலதினம் | ப |
| 12 | வி. | அர்ச். குவால்பேட் அருளப்பர் | வெ |
| 13 | வெ. ம | காலதினம் | ப |
| 14 | சனி | அர்ச். பொனவெந்தூர் | வெ |


# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு ஆடிமாதம் 8-ந் தேதி


## இளைஞனின் போராட்டமும்......

அந்த இளைஞனுக்கு வயது பதினேழுதான். பண்ணையில் உலாவிக்கொண்டிருந்தவேளை, நச்சு நாகமொன்று தீண்டிவிட்டது அவனது இடதுகைவிரல்களிலும், காலிலும்.

விஷமேறிக்கொண்டிருந்தது வேகமாக. அதனினும் விரைவாகச் செயலாற்றினான் இளைஞன். கூரிய கத்தியொன்றை யெடுத்தான். விஷமேறிய நான்கு விரல்களையும் துண்டித்தான், துணிகரமாக. பாதத்திலும் கத்தியால் பலதடவைகள் கீறி விஷத்தைப் போக்கினான்.

காயங்களிலிருந்து குருதி வெள்ளமாயோடப் பக்கத்தில் நின்ற டிராக்டர் இயந்திரம்வரை தள்ளாடித்தள்ளாடிச் சென்றான். காலும் கையும் காயப்பட்டநிலையிலும் அந்த எந்திரத்தைச் செலுத்திக்கொண்டு பண்ணை இல்லத்துக்குச் சென்றான். அங்கு எவருமில்லை, இளைஞனும் மனஞ்சளைக்கவில்லை.

இல்லத்துள் விரைந்துசென்றான். தொலைபேசிமூலம் தாயை அழைத்தான். நடந்தவற்றைக் கூறினான். கணப்பொழுதில் அன்னை மருத்துவ நிபுணர்களுடன் வந்துசேர்ந்தாள். இளைஞனின் உயிரும் காப்பாற்றப்பட்டது.

## ......பரலோக பாதையும்

தனதுயிரைக் காக்க விரும்பினான் இளைஞன். எனவே, தீவிரித்துச் செயலாற்றினான், திட்டமிட்டுச் செய்யப்பட்டவை அவனது செயல்கள். அதனால் மரணஆபத்திலிருந்து தப்பினான். தனது ஓர் அங்கத்திலும் பார்க்க உயிர் பெரிதாயிருந்தது. எனவே, யோசனையின்றியே விரல்களைத் துண்டித்துவிட்டான்.

ஒருநாளில் பலதடவைகளில் ஆபத்துகளில் சிக்கிக்கொள்ளுகிறோம். இவற்றில் சில நமதான்மாவைப் பாவப்பழக்கங்களில் ஈடுபடுத்தக்கூடியன. தீயசெயல்களை இறைவன் வெறுக்கிறார். எனவே, இப்பழக்கங்களினால் அவரின் அன்பை இழந்துவிடுகிறோம்.

தேவனின் வெறுப்பைத் தேடிக்கொள்வது மரணத்தைக் கட்டி அணைப்பதற்குச் சரி. அவரின் அரவணைப்பின்றி நாம் அறநெறியில் ஒழுகவியலாது. அன்னையைப்பிரிந்த மகவு பாதுகாப்புடன் வாழமுடியுமா?

தினசரி தீயசெயல்களிலிருந்து நாம் காப்பாற்றப்படல்வேண்டும். அதற்கு ஒரேவழி பாவச்சூழல்களிலிருந்து வேறுபட்டு நிற்றலே. அந்த இளைஞனின்செயல் நமக்குச் சிறந்த வழிகாட்டாக விளங்குகிறது. எம்மைத் தீயசெயல்களில்விழுத்தும் ஆள், இடம், பொருள் முதலியவற்றை எம் வாழ்க்கையிலிருந்து அகற்றத் தெண்டிப்போம்.

கிறிஸ்து கூறுகிறார்: பாவச்செயல்களைச் செய்வதற்கு உனது கையே உதவுமாயின் அதை வெட்டித் தூரஎறிந்துவிடு. இருகரங்களுடன் நரகத்துக்குப்போவதிலும் பார்க்க, ஒற்றைக் கையனாகப் பரலோகம் செல்வது உனக்கு எவ்வளவோ மேலாயிருக்கும்.

### செப அப்போஸ்தலசபை வெளியீடு

#### ஆடி மாதம்

**பொதுக்கருத்து:** திருச்சபையின் பொதுச்சங்கத்தில் கலந்து கொள்பவர்கள் எல்லோருக்கும் சர்வேசுர[illegible] மிகுந்த ஞானஒளியை அளிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** மிஷன்நாடுகளில் வேதசம்பந்தமான கலைகளும், இலக்கியங்களும் தகுதியுள்ளவைகளாய்ப் பலன்தரும் முறையில் முன்னேற்றம் அடையும்படியாக மன்றாடிக் கொள்வது.

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென்று குறித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

## இவ்வார அர்ச்சியசிட்டவர்

### வீரத்தாய் அர்ச்சியசிஷ்ட பெலிசித்தம்மாளும் வேதசாட்சிகளான அவருடைய 7 திருப்புத்திரரும்

திருநாள்: ஆடி 10

**முன்மாதிரியின்விளைவு:**

காலம் கி. பி. 2-ம்நூற்றாண்டு உரோமைநகரிலே அந்தோனியஸ் என்னும் சக்கரவர்த்தி ஆண்டுவந்தான். அந்நகரில் உயர்ந்த குடும்பத்தில் பெலிசித்தம்மாள் (பாக்கியவதி) என்று அழைக்கப்பட்ட ஒரு உத்தம விதவை இருந்தாள். அவளுக்கு ஏழு புத்திரர் இருந்தனர். அவர்கள் சிறுவயதினர். புருஷன் உயிருடன் இருந்த காலத்திலேயே யாவரும் கத்தோலிக்க மறையிற் சேர்ந்துகொண்டனர். வேதவைராக்கியம் நிறைந்த ஒழுக்கமுடையவர்கள். இக்குடும்பத்தினரின் முன்மாதிரியினாலும் புத்திபோதனையினாலும் பலபதிதர் மனந்திரும்பிக் கிறிஸ்தவர்கள் ஆயினர். அரசன்வழிபட்டுவந்த தெய்வங்களுக்கு ஆதரவு குன்றத்தொடங்கிற்று. குருமார் கொந்தளித்தனர். அரசன் கோபாவேசம் கொண்டான். தெய்வங்களுக்குவந்த அவமானத்துக்காக பெலிசித்தம்மாளும் அவள்பிள்ளைகளும் அத்தெய்வங்களுக்கு சாந்திப் பலிசெய்ய வேண்டுமென்று பணிக்கப்பட்டனர்.

**வீரக்கத்தோலிக்கதாய்:**

அவர்களைக்கொண்டு அவ்வாறுசெய்விக்க பலவகை முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆசைவார்த்தைகள் சொன்னார்கள்—வெருட்டினார்கள். புப்பிளியஸ் என்னும் நகாதிபதி பெலிசித்தம்மாளைத் தன்னிடங் கூப்பிட்டு "உன் பிள்ளைகள் சாகாதபடிக்குத் தேவர்களைக்கும்பிட அவர்களுக்குப் புத்தி சொல்" என்றான். அவள் தன்பிள்ளைகளைப்பார்த்து அந்த அதிகாரிக்கு முன்பாகவே, "என்மக்களே, பரமண்டலத்தை அண்ணாந்து பாருங்கள், அதிலே இருக்கிற யேசுநாதர் உங்களுக்கு மோட்சபாக்கியங் கொடுக்க அர்ச்சியசிஷ்டர்களுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்தஅதிகாரிகள் கூறுகிறபடி இத்தெய்வங்களுக்குப் பலியிட்டால் நித்தியநரகமும் ஆக்கினையும் எமது கதியாகும். கிறிஸ்துநாதருக்குப் பிரமாணிக்கமாய் இருங்கள். மோட்சபாக்கியம் எங்களுடையது" என்றாள். இது கேட்ட புப்பிளியஸ் ஆத்திரங்கொண்டான். பெலிசித்தம்மாளுக்கு கன்னத்திலே அநேகவிசை அடிக்கக் கட்டளையிட்டான். அந்த ஏழுபிள்ளைகளுக்கும் கசையடிகொடுப்பித்துக் காவலிலிட்டான். செய்தி அரசன் காதுக்கு எட்டியது. மேலும் தாமதிப்பதில் பயனில்லையென அறிந்து அரசன் கட்டளைப்படி: பெலிக்சியார் பிலிப்பு என்னும் இருவரையும் துஷ்டத்தனமாய் சவுக்கால் அடித்துக் கொன்றார்கள். சில்வா என்கிறவரை துண்டுதுண்டாய் நறுக்கிப்போட்டார்கள். அலெக்சாந்தர், வித்தால் மற்சியால் என்பவாகள் தலைவெட்டுப்பட்டார்கள். இவ்வுபத்திரவங்கள் எல்லாவற்றையும் தன்கண்களால் பார்க்க சகிக்கமுடியாத மனவேதனையை அனுபவித்தாள் வீரகத்தோலிக்கதாய் பெலிசித்தம்மாள். மேலும் நாலுமாசங்களாய் கோரதண்டனைகளை அனுபவித்தன்பின் அவளும் வேதசாட்சியாக மரணத்தை அடைந்தாள்.

**கத்தோலிக்க வீரத்தாய்மாரே!**

இன்று இந்த ஏழுசகோதா வேதசாட்சிகளும் தேவனின் முன்னிலையில் நட்சேஸ்திரங்கள்போல ஒளிவீசிக்கொண்டிருப்பதற்குக் காரணம் அவர்களின் வீரத்தாய் பெலிசித்தம்மாளல்லவா? அவள் தமது பிள்ளைகளைத் தேவனுக்கு உகந்தவர்களாய் எவ்வாறு வளர்த்தாளோ, அவ்வாறே ஒவ்வொரு கத்தோலிக்கதாயும் தனது பிள்ளைகளை வளர்த்துவர வேண்டாமா? தமது பிள்ளைகள் சுகசீவியம் சீவிக்கவேண்டுமென்றும் பட்டம்பதவிகள்பெற வேண்டுமென்றும் தாய்மாருக்கு உள்ளவிருப்பத்திலும் பன்மடங்கு ஆசை அவர்கள் மோட்சபாக்கியத்தை அடைவதற்கு வழிவகுப்பதில் இருக்க வேண்டாமா? கத்தோலிக்கதாய்மார்கள் வீரதியாகிகளாய் விளங்கவேண்டும்.

## யேசுநாதருடைய திருஇருதயத்துக்குத் தங்கள் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திரு இருதயமே! கிறிஸ்துவக் குடும்பங்களுக்குத் தேவரீர் செய்துவருஞ் சகல உபகாரங்களையும், சொல்லமுடியாத உமது நன்மைத்தனத்தையும், நினைந்து, நன்றியறிந்த பட்சத்தோடு உமது திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்துகிடக்கிறோம்.

நேசமுள்ள யேசுவே! எங்கள் குடும்பங்களிலுள்ள சகலரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தேவரீர் எங்களை ஆசீர்வதித்து, இப்போதும் எப்போதும் உமது திரு இருதய நிழலில் நாங்கள் இளைப்பாறச் செய்தருளும்.

தவறி எங்களில் எவனாவது உமது திருஇருதயத்தை நோகச்செய்திருந்தால், அவன் குற்றத்துக்கு நாங்களே நிந்தைப்பரிகாரஞ்செய்கிறோம், உமது திருஇருதயத்தைப் பார்த்து எக்கள் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு அவனுக்குக் கிருபைசெய்தருளும்.

இதுவுமன்றி உலகத்திலிருக்கும் சகல குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். பலவீனர்களுக்குப் பலமும், விருத்தாப்பியர்களுக் ஊன்றுகோலும், விதவைகளுக்கு ஆதரவும், அனாதைப்பிள்ளைகளுக்குத் தஞ்சமுமாயிருக்கத் தயைபுரியும். ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள், அவஸ்தைப்படுகிறவர்கள் தலைமாட்டில் தேவரீர்தாமே விழித்துக்காத்திருப்பீராக.

யேசுவின் இரக்கமுள்ள திருஇருதயமே! சிறு பிள்ளைகளை நீர் எவ்வளவோ பட்சத்தோடு சிநேகித்தீரே. இந்த விசாரணையிலுள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை ஆசீர்வதியும் அவர்களுடைய இருதயத்தில் விசுவாசத்தையுந் தெய்வ பயத்தையும் வளரச்செய்யும். சீவியகாலத்தில் அவர்களுக்கு அடைக்கலமாகவும், மரண சமயத்தில் ஆறுதலாகவும் இருக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

திவ்விய யேசுவே! முறையாய் உமது திருச்சிநேகத்தில் சீவித்து மரித்து, நித்தியகாலமும் எங்கள் குடும்பம் முழுதும் உம்மோடு இளைப்பாறக் கிருபைபுரிந்தருளும் ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியா தம்பி

'நடக்கத்தான் தெருஅமைத்தார்' என்றங் காடும்
நாகத்தை மிதித்தெவரும் நடந்தா ரில்லை.
கடக்கத்தான் கடல்வழியை ஓடம்; ஆனால்
கண்டுவிட்டால் ஓரோட்டை கால்உள் வையார்
'குடிக்கத்தான் நீர்தந்தார்' என்றங் நீரில்
குப்பைஅழுக் கிவைகண்டும் குத்திடா ரில்லை.
'படிக்கத்தான் பத்திரிகை' எனநீ கண்ட
'பாழ்களையும்' படிக்கின்றாய்; சரியா தம்பி.

●

வானத்துக் கோள்களிலும் வாழ்வைக் காணும்
வகைமுயலும் அறிவியலின் நுட்பம் சொல்லி
தேனொத்த கவிமலர்கள்; திருவார் வாழ்க்கை
தெரித்திடுநற் கதைமலர்கள் திளைக்கப் பூத்து
மோனத்து நிலைகண்ட மூத்தோர் வாக்கை
மொண்டுவந்து சமுதாய வாழ்விற் பெய்து
கூனொத்த 'மனம்நிமிர்த்தல்' இதழின் வேலை,
குப்பைகளைக் கிளறுவதோ பிறவின் வேலை.

●

அன்னத்தைப் போல்நன்றைப் பிரித்து நானும்
அறிவுபெற முயல்கின்றேன் அண்ணா என்றாய்
சொன்னத்தைச் சொல்கிளிநீ—சிறுவன்; தீயோர்
சூதுக்கள் யாதொன்றும் அறியாய் தம்பி
பொன்னொத்த எம்பெருமான் போதம் சொன்னால்
புளிப்பென்பாய்; பொல்லார் சொல் 'புதுமை' என்பாய்
'பின்னத்தில்' தடுமாறும் பிஞ்சுன் மூளை,
பெரியவர்கள் விவகாரம், பேச்சிங் கென்ன?

●

சில்லறைகள் ஒலிக்கட்டும் தாளுக் கென்ன?
சிறுதிரிகள் எரியட்டும் பரிதிக் கென்ன?
புல்லறிவார் புலம்பட்டும் அறிஞர்க் கென்ன?
புதுமைஎலாம் ஓரிருநாள்; பொறடா தம்பி
நல்லதொரு எதிர்காலம் நாளை காண
நாளுமுந்தன் கடமையிலே நாட்டம் காட்டு
வல்லவனாய், நல்லவனாய் வளர்வாய் வீணர்
வம்புகளில் சிக்காதே; வணக்கம் — அண்ணன்.

— பா. சத்தியசீலன்.

# கன்னியின் தியாகம்

"மரியா, இங்கே வா..." வாய் பதற, நாத்தடுமாற அவளை அதிகாரத்தோரணையில் அழைத்தான் அலெக்சாந்தர்.

அடுக்களையில் சமயல்வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த மரியா திடுக்கிட்டாள். பதில் சொல்ல அறியாமல் அப்படியே அசைவற்ற உருவம்போல் நிற்க... திரும்பவும் அதே அதிகாரத் தொனி.

"ஏ! மரியா, நான் கூப்பிட்டது காதில் விழவில்லையா?" என்று முன்னிலும் அதிககெம்பீரமாகத் தொனித்தது. ஒருவினாடிக்குள் அலெக்சாந்தர் பாய்ந்துவந்து மரியாவின் முன் நின்றான். செய்வதறியா அப்பேதைப்பெண் அவ்விடமிருந்த மேசையைச்சுற்றி ஓடத்தொடங்கினாள். அலெக்சாந்தரும் அவளை விடுவதாயில்லை. சொற்பநேரத்தில் அம்மேசை அலெக்சாந்தரின் காலால் உதைத்துத் தள்ளப்பட்டது; மரியா அவன் கைதியானாள். "மரியா என் விருப்புக்கு இணங்குகிறாயா? அல்லது..." என்று தன் கையிலுள்ள கட்டாரியை அவள் கண்முன் காட்டிப் பயமுறுத்துகிறான். மரியா கூப்பாடு போட்டாள்; அவள் சப்தத்தைக் கேட்க யாராவது இருந்தால்தானே; மரியா மறுத்தாள். "அலெக்சாந்தர் ...அது பாவம், நீ நரகத்துக்குப்போவாய்", என மன்றாடினாள். அவள் மன்றாட்டுப் பலிப்பதாயில்லை. "...மறுக்காதே மரியா அன்றேல் உன் உயிரை எடுக்கவா?" என மூர்க்கமாய்க் கத்தியபடி மரியாவைத் தள்ளினான். மரியா அவனைக் கடித்தும், விராண்டியும், உதைத்தும் அவனது பிடியிலிருந்து விலகத்தெண்டித்துத் தன் உயிரையும்மதியாமல் போராடிக்கொண்டிருந்தாள். "அலெக்சாந்தர்,... அது பாவம். அலெக்சாந்தர் நீ நரகத்துக்குப்போவாய்... நீ நரகத்துக்குப்போவாய்..." அலெக்சாந்தர் இப்பதிலை ஏற்கத் தயாராயில்லை. "கடைசிமுறையாகக் கேட்கிறேன் சம்மதிக்கிறாயா, இல்லை?" சில நிமிடநேர மவுனம். "...அலெக்சாந்தர் இது பாவம், உனக்கு இணங்கமாட்டேன்; இணங்கமாட்டேன்", தன் உயிரையும் மதியாமல் கூறினாள் மரியா. அடுத்தநிமிடம் அலெக்சாந்தர் தன் எண்ணம் மரியாவிடம் பலிக்காதுஎனத் திண்ணமாய் நம்பினான்; அவன் கையிலுள்ள கட்டாரி அப்பேதைப் பெண்ணின் சரீரத்தைப் பதம்பார்த்தது. மரத்தில் குத்துவதுபோல் குத்திக்கிறினான் அப்புனிதையின் உடலை. மரியா இறந்துவிட்டதாக நினைத்துக் கட்டாரியை ஒருமூலையில் வீசிஎறிந்தான். தன் அறையைத் தாளிட்டுக்கொண்டு அதில் பதுங்கிக்கொண்டான் அப்பாதகன்.

லூயிஸ், அசுந்தா இவர்கள் மகள்தான் மரியா. ஏழைகள் என்றபோதிலும் தெய்வபக்தியில் திளைத்துஊறியவர்கள். இவர்கள் குடும்பம்பெரிது, வருவாய்சிறிது. லூயிசின் உழைப்புக் குடும்பத்தைப் பராமரிக்கப் போதுமாயிருக்கவில்லை. எனவே, லூயிஸ் தன் குடும்பத்தைத் தாங்கள் தங்கியிருந்த கொரில்னேடோவைவிட்டுப் பெரையிக்கு அழைத்துச் சென்றான் நல்வாழ்வுக்காக. பெரையில் லூயிஸ் உழைத்தான், உழைத்துக்கொண்டே இருந்தான் தன் குடும்பத்துக்காக. சொற்பகாலத்தில் [illegible]லுக்குப் பலி[illegible]. [illegible] செய்வதறியாது துடித்தாள், அழுதாள், வேறுஎன்னதான் செய்ய முடியும் அந்த ஏழைத்தாயால். தனது குடும்பத்தைக் காப்பாற்றத் தானே உழைக்கத் தலைப்பட்டாள்; அசுந்தா தனது குத்தகை வயலில் ஜியோவான்ஸி, அவன்மகன் அலெக்சாந்தர் என்ற இரு பங்குக்காரர்களுடன் வேலைசெய்தாள். மரியா வீட்டுவேலைகளையெல்லாம் கவனிக்கத் தொடங்கினாள். சின்னஞ்சிறு வயதிலே மரியா பெரிய மனுஷிபோல் ஒரு குறையுமின்றி வீட்டுவேலைகள் எல்லாவற்றையும்கவனித்தாள். இவர்கள் குடும்பத்துடன்தான் ஜியோவான்ஸியும், அவன் மகன் அலெக்சாந்தரும்கூடி வாழத் தொடங்கினர். உணவு முதலானவையெல்லாம் ஓர்அறையில்தான் வைத்துக்கொண்டனர். காலஞ் செல்லச் செல்ல ஜியோவான்ஸி குடிக்கத் தொடங்கினான். அவன் மகன் அலெக்சாந்தர், அசுத்த புத்தகக்கட்டுகளை மணிக்கணக்காக வாசித்துமுடித்துக்கொண்டிருந்தான். சிறுகச் சிறுக அலெக்சாந்தரை அசுத்த எண்ணங்கள் வாட்டின. மாசற்றமரியாவைத் தன் வலைக்கு இழுக்க முயற்சித்தான். மரியா அவன் எண்ணமறிந்து அவன் கண்ணிற்படாமல் வாழத்தொடங்கினாள். ஆனால், ஆவேசங்கொண்ட அந்த அலெக்சாந்தர், மரியாவை இணங்க வைக்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்றொருநாள் வெய்யில் கடுமையாக இருந்தது. அலெக்சாந்தர், அசுந்தா, மரியாவின்தம்பி மரியானோ முதலானவர்கள் வயலில் சூடுமிதித்துக்கொண்டிருந்தனர். மரியா அமைதியாகத் தன் வீட்டுவேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். சொற்பநேரத்தின்பின் அலெக்சாந்தர் சூடுமிதிப்பை நிறுத்திவிட்டுத் தன் கைக்குட்டையை எடுத்துவருவதாகப் பாசாங்குசெய்து வீட்டுக்குச் சென்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# தேதிகளில் வத்திக்கான் சங்கம்

- **25 தை 1959:** பரிசுத்த தந்தை அருளப்ப பாப்பரசர் இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கம்பற்றி முதல்முறையாகப் பிரகடனப்படுத்தினர்.
- **17 வைகாசி 1959:** காலஞ்சென்ற கர்தினல் தார்டினி ஆண்டகையைத் தலைவராகவும் மொன்சிஞ்ஞோர் பெலிசியை செயலாளராகவும் கொண்ட காரிய நிர்வாகக்குழு நிறுவப்பட்டது.
- **3 ஆடி 1959:** வத்திக்கான் சங்கத்தின் அவசியத்தை விளக்கும் நிருபமொன்றை பரிசுத்த தந்தை வெளியிட்டார்.
- **30 ஐப்பசி 1959:** செயலாளரின் அனுசரணையுடன் கர்தினல் தார்டினி ஆண்டகை வத்திக்கான் திருச்சங்க ஆயத்தங்களை ஆரம்பிக்கு முகமாக பத்திரிகை நிருபர் மகாநாடு ஒன்றை நடத்தினர்.
- **25 தை 1960:** ரோமின் சினொட் சங்கம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் நோக்கங்களை ஆராய்ந்தது. பரிசுத்த பாப்பரசர் இக்கூட்டத்தில் குருத்துவ அந்தஸ்துபற்றி முக்கியதோர் சொற்பொழிவை நிகழ்த்தினர்.
- **5 ஆனி 1960:** பொதுச்சங்கம் ஆராயவிருக்கும் பிரச்சனைகள் பற்றித் தெரிவிக்கும் 3000 துக்குமதிகமான கடிதங்கள் நிர்வாகக் குழுவினருக்கு உலகமடங்கலுமிருந்து அனுப்பப்பட்டிருப்பதாக ரோமன் அவதானி பத்திரிகை உத்தியோக பூர்வமாக வெளியிட்டது.
- **10 ஆனி 1960:** கத்தோலிக்க கொள்கைகளையும் தத்துவங்களையும்பற்றி ஆலோசனை தெரிவிக்கும் 65 நிருபங்கள் உலகின் பல கத்தோலிக்க சர்வகலாசாலைகளிலிருந்து நிர்வாகக் குழுவினருக்குக் கிடைத்தன.
- **14 கார்த்திகை 1960:** காரியநிர்வாகியின் முன்னிலையில் பொதுச் சங்கத்துக்கான வேலைகளை ஆரம்பிக்கும் பணியைப் பாப்பரசர் தொடக்கிவைத்தார்.
- **7 மார்கழி 1960:** பொது ஆயத்தக்குழு கூடியது. 48 கர்தினல்மார்கள், 215 பிதாப்பிதாக்கள், அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள், 456 குருக்கள், துறவிகள், 8 இல்லறத்தோர் இக்குழுவில் பங்குபற்றினர்.
- **1 தை 1961:** பொதுச்சங்கத்தில் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்வோரின் தொகை நிர்ணயிக்கப்பட்டது. இத்தொகை அவ்வவ்நாட்டின் பொதுக்குடிசன மதிப்பில் கத்தோலிக்கர்கள் என்ன விகிதாச்சாரத்தில் உள்ளார்களோ அதற்குச் சமனானமுறையில் கணக்கிடப்பட்டுளது.
- **15 சித்திரை 1961:** நிர்வாகக்குழுவினர் கத்தோலிக்க கொள்கைகள், ஆகமங்கள் சம்பந்தமான 4232 ஆலோசனைகளையும், தேவதிரவிய அனுமானங்கள், புதுவேதநாடுகள் சம்பந்தமான 4740 ஆலோசனைகளையும் ஆராய்ந்திருப்பதாக அறிக்கை வெளியாகியது.
- **19 சித்திரை 1961:** உலகமடங்கலுமுள்ள கத்தோலிக்கர்கள் அனைவரும் பொதுச்சங்கத்தின் சித்திக்காகச் செபிக்குமாறு பாப்பரசர் வேண்டுகோள் விடுத்தார். இச்சங்கத்தின் பாதுகாவலை அர்ச். சூசையப்பரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் பரிசுத்த தந்தை பிரகடனப்படுத்தினர்.
- **12 ஆனி 1961:** பொதுக்குழுவின் முதலாவது கலந்துரையாடல் ஆரம்பமாயிற்று.
- **20 ஆனி 1961:** வத்திக்கான் சங்கத்தின் இலட்சியங்களை பரிசுத்த தந்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.
- **25 மார்கழி 1961:** அடுத்த ஆண்டில் இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கம் கூட்டப்படுவதுபற்றி உத்தியோகபூர்வமான பிரகடனம் ரோமாபுரியின் நான்கு பிரதான மகாலயங்களிலும் பிரகடனப்படுத்தப்பட்டது.
- **2 மாசி 1962:** ஐப்பசிமாதம் 11-ந் தேதி இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கம் ஆரம்பமாகுமென பாப்பரசரின் விசேட [illegible] தெரிவித்தது.

தொகுப்பு: சா. பெ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே,

ஆடிமாதம் அரும்பிவிட்டது. அகில உலக பாவம்போக்கத் தம்மையே தியாகம்செய்த மீட்பர் யேசுவின் திரு இரத்தத்தின் மாதம். இம்மாதத்துக்கான விசேட பக்திமுயற்சிகளாக திருக்காயங்களின் செபமாலை, திரு இரத்தத்தின் பிரார்த்தனை, ஐந்து திருக்காயங்களின் செபம் முதலியவற்றை எமது குடும்பத்தில் செபிக்க முயலுவோமாக.

மேலும் இம்மதி ஆறுந்தேதி இரத்தம்வடித்த வீலியான அர்ச். மரிய கொறற்றியின் திருநாள் வருகிறது. கற்புக்காகப் பிராணனைக்கொடுத்த இவ் வுத்தமசீலி நம் இளமங்கையர்க்கோர் எடுத்துக்காட்டு. அந்த வீலிமலரைப் பிறப்பித்த அவளது அன்னையோ எமது கன்னியர்களை கற்புநெறி பிசகாது பயிற்றுவிப்பதில் எமது அன்னையர்களுக்கு நல்ல முன்மாதிரிகையாக விளங்குகின்றாள். எனவே, எமது வீடுகளில் மரியகொறற்றியின் உருவப்படமொன்றை வைத்து எமதுபிள்ளைகள் அவவின் வரலாற்றை அறிந்து புனிதவாழ்வில் ஒழுகுமாறு செய்வோமாக. வணக்கம்.

அன்புச் சோதரி ரோஜா.

## மைவிழியாரும் "மை" யும்

- கன்னியர் தீட்டுவது கண் மை— காணும் அழகையளிப்பதோ எளிமை.
- மண்ணில் நாடுவது பெருமை— படித்துப் பண்புடன் திகழ்வதோ அருமை.
- ஆடம்பரம் அளிப்பது வறுமை— அணங்குகள் ஆபரணமாவது பொறுமை,
- அவசரப்படுவது பேதமை— அதை நீக்க உதவிடும் பதமை.
- கஷ்டத்தில் மருந்து கலங்காமை— கருத்தில் கொள்வதோ கடமை.
- மனையில் துலங்கிடும் தூய்மை— அதனால் வாழ்வில் பொங்கிடும் இனிமை.
- தனயரை அடைந்தால் தாய்மை— தக்க சான்றோராக்குதல் மேன்மை.
- உலகைத் துறந்தால் கன்னிமை— கற்பை இழந்தால் வாழ்வோ வெறுமை.
- கணவனை இழந்தால் கைம்மை— பின்னர் காலமெல்லாம் தனிமை.
- இளமை போனால் முதுமை— இதையறியாது ஏன் வீண் பெருமை.
- புண்ணியம் தேடுமிடம் இம்மை— அதன் பலனை அளித்திடும் மறுமை.
- இங்கு கூறிய யாவும் உண்மை— அதை உணர்ந்து வாழ்க பெண்மை.

## கல்லான கணவனைப் புல்லாக்கும் மாத்திரைகள்

(திருமதி. L. R. A. வேதநாயகம்)

1. ஒன்றே தெய்வம் ஒருவனே கணவன் என்று ஒழுகிவாழவேண்டும் பெண்.

2. கணவனின் குறைகளை அவன் இளைப்பாறியிருந்து இரவில் நித்திரைக்குப் போகுமுன் சாவகாசமாயும், சந்தோஷமாயும் எடுத்துக்காட்டித் திருந்திநடக்கும்படி தாழ்மையுடன் பேசவேணும்.

3. மதுபானம், புகையிலை போன்ற மஸ்தான பண்டங்களைப் பாவிக்கும் கணவனை அடியோடு நிறுத்திவிடும்படி கடுமையான வார்த்தைகளால் வற்புறுத்தாமல், படிப்படியாக மறக்கும்படியும் வீட்டிலே நீங்கள் சிக்கனமாக நடப்பதையவர்கள் அறியும்படியும், குடும்பத்திலே அத்தியாவசியமானவற்றைச் செய்யப் போதிய பணமில்லாததால் செய்யவில்லையென்பதையும் எடுத்துக்காட்டி மிகவும் கனிவானமுறையில், தகுந்தநேரத்தில் (போதையில்லாதபோதும்) எடுத்துரைக்கவேணும்.

4. உங்கள் கணவர் தீயநண்பர்களோடு சேர்ந்தும், தீயவர்களை வீட்டுக்கழைத்துவரும் தன்மையுடையவராயிருந்தால், அவரை வெளியில்போகாமல் ஏசித், திட்டி மறிக்காமல், அவரே மனங்கொண்டு போகாமல் நிற்கக்கூடிய விதமாக அவருக்கு வேண்டியவற்றை வீட்டிலே எடுத்துவைத்துக் கொடுத்து, பிள்ளைகளின் அன்பு நடைத்தையாலும், உங்கள் அமுதான வார்த்தைகளாலும், இனிய செயல்களாலும், அனுவசியமாய்க் கணவனை வெளியில் விடாமல் வீட்டுவேலைகளைக் கொடுத்துக் குடும்பத்தையினிதாய் நடத்தலாம்.

5. கணவனுடைய "வருமானம்" அவர் குடும்பத்துக்காகப்பட்ட "கடன்கள்" அவர் அவசியங்கருதித் தனது பெற்றோருக்குச்செய்யும் "உதவிகள்" இத்தனையையும் நாங்கள் அறிந்து, அவரோடு அனுதாபப்பட்டு அவரைத் தனியாக யோசித்துக் கவலைப்படவிடாமல் அவருடன சேர்ந்து அக்குறைகளைத் தக்கபடி சமாளிக்கமுயன்று அவர்மனதை உங்கள்பக்கம் திருப்பி அவரைத் திருப்திப்படுத்தவேணும்.

6. கணவன் உங்களுக்கெனத் தனக்குப்பிடித்தமான பொருட்களையோ, தின்பண்டங்களையோ, ஆசையுடன் வாங்கிவந்தால் அவற்றைச் சிரித்தமுகத்துடன் சந்தோஷமாகப் பெற்றுக் குறையிருந்தாலும் நிறையாக எண்ணிப்புகழ்ந்து, கணவன் மனங்கோணாமல் இனிதாய் நடக்கவேணும்.

7. உங்கள் கணவனுக்கு, நீங்களும் பிள்ளைகளும், எந்த உடுப்புடுத்தினால் விருப்பமாயிருக்குமென்பதையறிந்து அவருக்குகந்தபடி உடுத்தி அழகுசெய்தால் அதுவும் குடும்பம் இன்பமாக்கும்.

8. கணவருடைய பெற்றோர், உடன்பிறந்தார், உறவினர், உங்கள் வீட்டுக்கு வந்தால், அவர்களை மிகவும் அன்புடன் நடத்தி, உங்களுக்கு வசதியானபடி செய்து சாப்பிட்டுக்குடித்துப் போகும்படி அவர்களை மதித்து நன்றாக உபசரிக்கவேணும்.

9. அதிகாலையில் கணவன் கண்விழிக்குமுன எழுந்து தலைவாரி, முகங்கழுவி, காப்பிதயாரித்துக் கணவனை எழுப்பிவிட்டுக் குழந்தைகளைக்கவனித்துப்பின் கணவன் தொழிலுக்குப்போவதற்காக வேண்டிய ஆயத்தங்களைத் தினமும் செய்யவேணும்.

10. கணவன் வேலைமுடிந்து வீடு திரும்பும்போது, வீட்டைத்துப்பரவாயும, மனைவிமக்களும் துப்பரவாயும் நின்று முகமலர்ச்சியுடன் வரவேற்றுநின்றால் குடும்பம் இன்பசாகரத்தில் மிதக்கும்.

11. கணவனைத் தனது இனிய உபசரிப்பாலும நடத்தையாலும் கவர்ந்து குடும்பசமேதராய்க் கடவுளைத் தொழுது கோவில் கடமைகளையும் சரிவரச்செய்து, வசதியான தானதருமங்களையும்செய்து தினமும் "குடும்பசெபமாலையை" ஓதிவரவேணும்.

12. வீட்டிலே திருக்குடும்பப் படம் ஒன்று கட்டாயமாகத் தொங்கவிட்டும், தங்கள் ஓய்வுநேரத்தில் அர்ச்சியசிஷ்டவர்களின் கதைகளைக்கூறும் நூல்களை வாசித்துப்பிள்ளைகளுக்கும் விளங்கப்படுத்தியும், வந்தால் எங்கள் குடும்பம் ஒருபோதும் பிரியாதஇன்பமயமானதாகும்.

குறிப்பு:

மேலே கூறப்பட்ட பன்னிரண்டு விதிகளையும் உலககத்தோலிக்கமாதர் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட "கணவனைக் கருணையுடன் காத்தால் கட்டாயம் குடும்பம் இன்பமாக வாழும்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

சிறுகதை

## "நான் தாயல்லப் பேய்"

மணமாகி ஐந்துஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன எனக்கு. ஆனால், அந்த மணமாலைதரும் புகழ்மாலை... ஆம்..., அதுதான் மழலைச்செல்வம் எனக்குக் கிடைக்கவில்லை. ஒரேயொரு குழந்தைக்காக ஏங்குகின்றேன். நான்தேடிய செல்வத்தைக் கடவுள்விரைவில் எனக்களிக்கவிருப்பதை உணர்ந்தேன். மனம் மகிழ்ச்சிக்கடலில் ஆடியது. நேரம் நெருங்கியது. தாதிப்பெண் "ஒரு குழந்தைக்காக ஏங்கினீர்களே அம்மா. இதோ கடவுள் இரண்டுகுழந்தைகளைத் தந்திருக்கிறார்" என்று சிரித்தபடி நான்பெற்றசெல்வங்களை எனக்குக்காட்டினாள். இரண்டும் பெண்குழந்தைகள். தங்க விக்கிரகம் போன்றிருந்தது ஒரு குழந்தை. அந்தக் குழந்தையைப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்போற்றோன்றியது. மற்றக்குழந்தையைப் பார்த்தேன் ...... மறுமுறை பார்க்க முடியவில்லை...... இல்லை...... நான் விரும்பவில்லை. இரண்டும் நான்பெற்ற செல்வங்கள்தான் சந்தேகமேயில்லை. ஆனால், அந்தக்குழந்தை ஏன் இப்படி அவலட்சணமாகப் பிறக்கவேண்டும்? கண்களை மூடிக்கொண்டேன். அஞ்சலா, அமலாஎனப் பெயர்சூட்டினோர்கள் இருவருக்கும். ஆம், அஞ்சலா பிறந்தஅன்றே பெற்றதாயின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டாள். பஞ்சணையில் படுக்கவைப்பேன் அமலாவை ......அஞ்சலா...... அவளுக்குத்தான் வெறுந்தரை இருக்கவே இருக்கிறதே. அமலாவின் அழுகைச்சத்தம் தேனாகப்பாயும் என்காதில். அஞ்சலாவின் அழுகுரல் நாராசமாக அலறும். அஞ்சலா "அம்மா" என்றால் அணைப்பது அமலாவைத்தான். 'தத்தித்தத்தி' நடந்துவருவாள் அஞ்சலா. தாவியணைப்பேன் அமலாவை. எவ்வளவுதான் நான்வெறுத்தபோதும அஞ்சலா என்னைத்தேடி ஓடிவந்தாள். நான் அமலாவைத் தேடிஓடினேன். இந்தநிலையில காலம்கடந்தது. பள்ளிப்பருவம். தெள்ளுதமிழ்ப்பயிலப்பள்ளிக்கு அனுப்பி வைத்தேன் அமலாவை. அஞ்சலா அழுதாள். தானும் போகவேண்டுமென்று அடம்பிடித்தாள். அடித்தேன் என் ஆத்திரம்தீர. பேசாமல் ஒருமூலையில் சுருண்டுபடுத்துவிட்டாள். அவளுக்காகப் பரிந்துபேசினாள் என் அம்மா. சீறிவிழுந்தேன். பேசவில்லை அவள். என்கணவர் — அவர் என்சொற்படிதான் கேட்பார். வீட்டுக்கு நான்தான் இராணி. அன்றொருநாள் அமலா ஒரு மிட்டாயைச் சுவைத்துக்கொண்டிருந்தாள். "அம்மாவுக்கு இல்லையா அமலா?" என்று செல்லமாகக் கேட்டேன். "நான் தரமாட்டேன்" என்று ஓடிவிட்டாள் அமலா. அதேசமயம் அஞ்சலா கையில்ஒருமிட்டாயைக்கொண்டோடி வந்தாள். நான் வேண்டாமென்று தட்டிவிட்டேன். பாவம் அஞ்சலா அழுதுகொண்டே பாட்டியிடம் சென்றாள். இன்னொருநாள் அஞ்சலாவும், அமலாவும் விளையாடிக்கொண்டிருந்தனர். ஆத்திரம் பற்றிக்கொண்டுவந்தது எனக்கு. "நீஇருக்கிற லட்சணத்திற்கு விளையாட்டு வேறா?" என்று அவள் முதுகில் பலமாக அறைந்துவிட்டுத் தேனீர்தயாரிக்கும்படி சமையலறைக்குள் பிடித்துத்தள்ளினேன். அன்றிரவு பத்துமணியிருக்கும். தூக்கம்வரவில்லை. பக்கத்தறையில் விக்கல்சப்தம் கேட்டது. எழுந்துவந்தேன் ஆறுதல் கூறஅல்ல, வேடிக்கைபார்க்க. சாவித்துவாரத்தின்வழியாகப் பார்த்தேன். அங்கே நான்கண்டகாட்சி மேசையின் மேல் அழகான தேவதாயின் சுரூபம் ஒன்று. அந்தச்சுரூபத்தைக் கட்டியணைத்தபடி "அம்மா, நான் தாயிருந்தும் அனாதையானேன். நீங்கள்தான் என்னைப் பெற்றதாயார். அம்மா, என் பரலோக அம்மா! சீக்கிரம்என்னை மோட்சத்துக்கு அழைத்துச்செல்லுங்கள்" என்று முனகிக்கொண்டிருந்தாள். தேவதாயின்கரங்கள் அவளை அணைப்பதுபோல் திடீரென ஒளிர்ந்தன. என் கால்கள் நடுங்கின. கண்கள் சுழன்றன. "ஐயோ" ஒன்று அப்படியே மயங்கிச் சாய்ந்துவிட்டேன். மறுநாள் கண்விழித்துப் பார்த்தேன். அஞ்சலா "அம்மா, அம்மா" என்று என்காலடியில்இருந்து அழுதுகொண்டிருந்தாள். என்கண்கள் அமலாவைத் தேடின. அஞ்சலா என்குறிப்பறிந்து, "அமலா தோழிகளோடு சினிமாவுக்குப் போய்விட்டாளம்மா" என்று கூறிவிட்டு மருந்துஎடுத்துவரச் சென்றுவிட்டாள். நான் திகைத்தேன். பெற்றதாய் சாகக்கிடக்கிறாள். பிள்ளை சினிமாவுக்குப் போய்விட்டாள். அஞ்சலாவும், அமலாவும் மனக்கண்முன் மாறிமாறி வந்துகொண்டிருந்தனர். அஞ்சலா... அவள்.... ஒரு தெய்வப்பிறவி... "அஞ்சலா, என்கண்ணே!" என்று வெறிபிடித்தவள்போல் கத்தினேன். அஞ்சலா திரும்பிப்பார்த்தாள். அவளுக்கு இது ஒரு அதிர்ச்சி! முதன்முதலாக அவள்முகத்திலே மலர்ச்சி. "அம்மா! நீங்கள்...... நீங்கள்தான் கூப்பிட்டீர்களா அம்மா" என்று கத்திக்கொண்டே ஓடிவந்தாள். 'தடால்' என்றொரு சப்தம். குறுக்கேயிருந்த கற்றூண் ஒன்றுடன்மோதிக் கீழேசாய்ந்துவிட்டாள் அஞ்சலா. 'அஞ்சலா' என்று கத்திக்கொண்டு ஓடிவந்து இரத்தவெள்ளத்தில்கிடந்த அவளைத்தூக்கி மடியில் வைத்து "அஞ்சலா என்னைப்பாரம்மா" என்றேன். அவள்என்னோடுபேசவில்லை. பேசவும்மாட்டாள். அவள் தன்னை நேசித்த பரலோகஅன்னையிடம் பறந்து சென்றுவிட்டாள். என் அஞ்சலாவை நான்தான்கொன்றுவிட்டேன். "நான் தாயல்ல, பேய்" என்று பைத்தியம் போல் உளறினேன். கனவிலே அஞ்சலா அழகிய வெண்நிற ஆடையுடன் தோன்றி 'அம்மா' என்றாள். அஞ்சலா என்னை அம்மாஎன்று அழைக்காதே. "நான் தாயல்ல, பேய்" என்றேன். "இல்லை அம்மா நீங்கள் பேய் அல்ல, தாய்" என்றாள் அவள். என் அஞ்சலாவை உயிரோடு சித்திரவதைசெய்த நான்எப்படித் தாயாகஇருக்கமுடியும்? என்ன? நீங்களேசெல்லுங்கள்; நான் தாயல்ல, பேய்தானே!


— நவாலியூர் நாயகி

---

கோவையில்வாழும் 2,50,000 கத்தோலிக்கருக்கும் சமயசுதந்திரம் இருந்துவருமென்று இந்திய பிரதமர் நேருவால் உறுதிவாக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கெல்லாம் சுதேசிகளையே பெரும்பான்மையினராகக் கொண்ட சுமார் 650 குருமார் சேவை புரிந்து வருகின்றனர். அங்குள்ள கத்தோலிக்கருக்கும், 3,50,000 இந்துக்களுக்குமிடையே தற்போது சிறந்தநல்லுறவு இருந்துவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12-ம் வருட மரண ஞாபகம்



பிறப்பு: 25-12-1927 இறப்பு: 5-7-1950

எனது அருமைக்குமாரர் திரு. இம்மனுவல் துரைரத்தினம் செல்வத்துரை அவர்கள் மறைந்து இன்றோடு (5-7-62) பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவாகின்றன.

பாவி பயந்த மணியெட் டிலேயோவெம்
ஆவித் துரைய னணைந்திட்டால்—பூவில்
மறவோ ரறவோருற் ருரைக்கெஞ்சிற்றேம்
துறவா துறவு மவர்க்கு.

இதனைக் கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

"நித்திய இளைப்பாற்றியை அவருக்குக் கொடுத்தருளும்சுவாமி; சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவர் பிரிவால் துயருறும்,

தாய்: ஸ்ரீமதி மு. செல்வத்துரை
பாரியார்: ஸ்ரீமதி செ. துரைரத்தினம்.
பிள்ளைகள்: அலக்சாண்டர் யோண் ஒவ் ஆக் ஜெயராணி.

சகோதரர்கள்: இராசரத்தினம், நாகரத்தினம், தம்பிரத்தினம், சங். சிஸ்ரர் மேரி லூமினு. (நேசரத்தினம்), தங்கரத்தினம், யோகரத்தினம், அரியரத்தினம், சண்முகரத்தினம்.

---

திருமதி ஆன் அருளானந்தம் அவர்கள்
அமரத்துவமடைந்த

## மூன்றம்வருட நினைவு

பிறப்பு: 26-4-1927 இறப்பு: 8-7-1959

இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும்ஆடிமாதம் 7-ம்திகதிசனிக்கிழமை காலை 6 மணியளவில் பரி. அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒருதுக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதைக்கண்ணுறும் வண. குருக்கள், சங். சந்நியாசிகள், கன்னியர்கள், பந்துமித்திரர்கள் அனைவரும் இவவின் ஆத்தும நித்தியஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இறந்த விசுவாசியின்ஆத்துமம் இரக்கமுள்ள தேவனில் சாந்தியடைவதாக. ஆமென்யேசு.

இவவைஇழந்து துன்புறும்
பெற்றோரும், கணவனும், பிள்ளைகளும்,
சகோதர, சகோதரிகளும்.

---

● சென்னைக் கிறிஸ்ரியன் கல்லூரியைச்சேர்ந்த ஜி. ஜெயராமன்என்ற ஒரு குருட்டுமாணவர் எம். ஏ. பரீட்சையில் இரண்டாம்வகுப்பில் சித்தியடைந்திருக்கிறார். இவர் அக்கல்லூரியின் முன்னைநாள் தமிழ்ப்பேராசிரியர் திரு. ரி. கே. கோபாலஐயரின் புதல்தவராவர்.

---

நுவரேலியாப்பங்கில்

## கத்தோலிக்க இளைஞர் மாநாடு

ஆடித்திங்கள் முதலதேதி ஞாயிறுவாரம் காலை 9 மணிக்கு நல்லாயன் உயர்தர பெண்கள்பாடசாலை முன்றலில் திருச்சபையின் எதிர்காலப் பிரஜைகளான வீரவாலிபரும், யுவதிகளும் குழுமிநின்று பாப்பரசரின் கொடிக்கு மரியாதைசெய்து தங்கள் விசுவாசத்தைக் காண்பித்து நின்றனர். அன்று தினம் நுவரெலியாப்பங்கின் இளைஞர் சமுதாயத்தின் புதிய சரித்திரத்தின் முதல் அத்தியாயம் ஆரம்பமானது என்று கூறவேண்டும். கண்டி மேற்றிராசனத்தில் கத்தோலிக்க இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு உழைக்கும் வண. கத்பேட் பெரோரா அடிகளாரின் அயரா உழைப்பினுலே இங்கு முதன்முதலாகக் கத்தோலிக்க இளைஞர் மாநாடு கூட்டப்படலாயிற்று.

இம்மாநாட்டில் பாடசாலையில் படிக்கும் இளைஞர்கள், படித்துவெளியேறிய இளைஞர்கள், உத்தியோகம் பார்க்கும் இளைஞர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் ஒன்றாகக் கூடியிருந்தனர். தற்கால இளைஞர் சமுதாயத்தின் பலவேறு பிரச்சினைகளையும், ஆராய்வதுடன் கத்தோலிக்க சமயத்தில் அவர்களின் பங்கென்ன? இன்றைய நிலையில் அவர்கள் கடமைகள் எவை? சேவைகள் எவை? அவர்களுடைய கஷ்டங்களை எப்படி மேற்கொள்ளவேண்டும் என்னும் அம்சங்களை ஆராய்வதே மேற்படி மாநாட்டின் குறிக்கோளாகவிருந்தது.

மாநாட்டுக் கூட்டத்துக்கு வண. கத்பேட் பெரோரா சுவாமிகள் தலைமைவகித்தார். மாநாட்டின் விசேஷ பேச்சாளராக வண. பிருடி எஸ். ஜே. அவர்கள் வந்திருந்தார். தலைவர் யாவரையும் வரவேற்றுப் பேசியபின் வண. பிருடி எஸ். ஜே. அவர்கள் "இளைஞர் தலைமை" என்னும் விடயம்பற்றி உரைநிகழ்த்தினர். அவர் தமது உரையில், "ஐக்கியப்பட்டு நாம் கருமமாற்றவேண்டும்; ஏனெனில், ஐக்கியமே பலம்; நாம் எல்லோரும் கிறிஸ்துவில் ஐக்கியப்படவேண்டும்" என்றார். மேலும் அவர், இளம் கத்தோலிக்க சேவையாளரின் இலட்சியத்தைக் கருத்தில்வைத்து ஒழுகவேண்டும். அதாவது கருமத்தை எம்முன் வைத்துச் சரியாகத் தீர்மானித்துச் செயல்பட-வேண்டும் இங்கு தீர்மானம் என்று குறிப்பிடுவது, கிறிஸ்துவ தீர்மானம்; கிறிஸ்துவநோக்கு. அதாவது கிறிஸ்துநாதர், நாம் தலையிடும் விடயத்தை எவ்வாறு நோக்குவார் என்ற அந்த அகஉணர்வோடு நோக்கி, அவர் எப்படி அதுவிடயத்தில் நடந்துகொள்ளுவாரோ அப்படியே நாம் செயல்படவேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

அதன்பின், தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளைஞர், யுவதிகள் படிப்புமுடிந்து உத்தியோகம் இன்றியிருக்கும் யுவர்கள், யுவதிகள் பாடசாலை மாணவ மாணவிகள் என்ற மூன்று குழுவினராகப்பிரிந்து அவரவர் பிரச்சினைகளையிட்டுக் கொடுக்கப்பட்ட வினுக்களுக்கு விடையளித்தனர். மூன்று குழுவினரிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி பிரிவுகள் இருந்தன.

குழுமுறையில் கூட்டம் இயங்கியபின், நண்பகல் 12 மணிக்குப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட கீதத்தைப்பாடிக்கொண்டு மடத்தின் சிற்றாலயத்துக்குச் சுற்றுப்பிரகாரமாகச் சென்றனர். திவ்விய பூசைப்பலியின்பின் மாநாட்டில் கலந்துகொண்ட எல்லோருக்கும் மதியஉணவு பரிமாறப்பட்டது.

ஒருமணிநேர இடைநேரத்தின்பின் மீண்டும் பி[illegible] கூடினர். [illegible] பரிசீலிக்கப்பட்ட முக்கிய பிரச்சினைகளைப்பற்றி விவாதித்தனர். அதையடுத்துக் கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தேநீர் உபசாரணையின்பின் திவ்விய நற்கருணை ஆசீர்வாதத்துடன் மாநாடு நிறைவெய்தியது. இம்மாநாடு வெற்றிபெற முக்கியகாரணமாயிருந்து சகல ஏற்பாடுகளையும், வசதிகளையும் செய்து உதவியவர் நல்லாயன் கன்னியர்மட சிரேஷ்டதாயாரும், பாடசாலை அதிபருமான சங். தாயார் யூபிரேஷியா அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. இளைஞரும், நுவரெலியாக் கத்தோலிக்க சங்க உறுப்பின[illegible]ாகத்துடன் மாநாட்[illegible] வெற்றிபெறச்செய்ய உதவினர்கள்.

—நிருபர்.

---

# பொதுச்சங்கத்தின்மீது............

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள்தான் அப்போஸ்தலர்களுடைய பின்தோன்றல்கள். அவர்களுடைய வழிவந்தவர்கள் என்றமுறையில் சாதாரண ஆளும் அதிகாரத்தையும், போதிக்கும் அதிகாரத்தையும் கொண்டிருக்கின்றார்கள். அப்போஸ்தலர்களிடமிருந்து போதிக்கும் அலுவலை அவர்கள் பின்தோன்றல் என்ற முறையில் பெற்றிருக்கிறபடியால், ஒவ்வொரு மேற்றிராணியாரும் தனக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் போதித்து வருகிறார்.

ஆனால்மேற்றிராணிமார்கள் திருச்சபையின் ஒரு பகுதி. அவர்கள் பாப்புவைத் தலைவராகக் கொண்டுள்ள மேற்றிராணியார் சபையின் உறுப்பினர். திருச்சபை உலகெங்கும் பரவிநிற்கும் பொதுச்சபையானதால் இந்த மேற்றிராணியார் சபையின் கடமை திருச்சபை முழுவதற்கும் போதிப்பதாகும். இந்தக் கடமையை அன்றாட வாழ்வில் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்றால் அவர்கள் அனைவரும் தங்களுக்குள்ளேயும், பாப்புவோடும் வேத உண்மைகள் சம்பந்தமாய் ஒன்றுபட்டுத் தவரு முறையில் போதித்து வருகிறார்கள். இதுவே போதிக்கும் ஆட்சி புரியும் சாதாரண முறை ஆனால், பாப்பானவர் அனைவரையும் கூட்டித் திருச்சங்கத்தின் வழியாக இந்தக்கடமையைச் செலுத்த அனுமதிக்கும்போது, அவர்கள் போதிக்கும் ஆளும் உரிமையைச் சிறப்பு முறையில் பயன்படுத்துகிறார்கள்.

எனவே, பாப்புவின் தலைமையில் அல்லது அவர் நியமிக்கும் ஒருவரின் தலைமையில் திருச்சங்கத்தில் மேற்றிராணிமார்கள் அனைவரும் கூடித் தீட்டும் சட்டங்களும், வரையறுக்கும் வேத சத்தியங்களும், விதிக்கும் தண்டனையும், ஏற்படுத்தும் ஒழுங்குமுறையும் திருச்சபையின் தவரு போதிக்கும் உரிமையைக் கொண்டிருக்கிறது.

பொதுச்சங்கத்தில் கலந்துகொள்பவர்கள் யார்? கர்தினல்மார்கள் மேற்றிராணிமார்களாயில்லாவிடினும் கலந்துகொள்ளலாம். குருகளாயிருந்த கர்தினல்மார்களையும் நம் தந்தை 23-ம் அருளப்பர் மேற்றிராணிமார்களாக்கிவிட்டார். பிதாப்பிதாக்கள், அதிமேற்றிராணிமார், மேற்றிராசனத்தை ஆளும் மேற்றிராணிமார்களும் திருச்சங்கத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்றிராசனத்தை ஆளுபவர் இன்னும் அபிஷேகம் பண்ணப்படாவிடினும் பரவாயில்லை. ஆனால், ஒரு சில மேற்றிராணிமார் யாதொரு மேற்றிராசனத்தையும் ஆளுகிறதில்லை. வயதின் காரணமாக ஓய்வு எடுத்துக் கொள்பவர்களாயிருக்கலாம். இத்தகைய மேற்றிராணிமார்களுக்குப் பெயரளவில் பழங்காலத்திலிருந்த மேற்றிராசனம் ஒன்றின் பெயர் கொடுக்கப்படும்; அதன் மேற்றிராணியார் என அவர்கள் அழைக்கப்படுவர். இவர்கள் சங்கத்தில் கலந்து கொள்ள மாட்டார்கள். மடாதிபதிகளும், சந்நியாசசபைத் தலைவர்களும் திருச்சங்கத்திற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பொதுச்சங்கத்தில் கலந்துகொள்ளும் இறையியல் வல்லுநர்கள், திருச்சபைச் சட்ட அறிஞர்கள் ஆகிய இவர்கள் வாதத்தில் கலந்துகொள்வார்கள். அறிவுரை கோருவார்கள். ஆராய்ச்சியில் தங்கள் கருத்தை வெளியிடுவார்கள். ஆனால், இவர்களுக்கு வாக்குரிமையில்லை. ஒரு மேற்றிராணியார் சங்கத்திற்கு வரக்கூடாத நிலையிலிருந்து, அவர் கொடுக்கும் காரணம் முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவருக்குப் பதிலாக வேறொருவர் சங்கத்திற்கு வரலாம். அவ்வாறு செல்பவருக்கு வாக்குரிமையில்லை. ஆனால், சங்கத்தின் நடபடிக்கைகளில் தனது கையொப்பம் இடுவார்.

பாப்பு திருச்சங்கத்தைக் கூட்டுவதின் காரணம் திருச்சபையின் மாபெரும் நன்மையை முன்னிட்டே ஆகும். அதனால் திருச்சபைக்குப் பயன் உண்டு. திருச்சபையின் வேத உண்மைகளை ஆழ்ந்து ஆராயவும், ஒழுக்க முறையைப் பொதுவில் பரிசீலனை செய்யவும், அனைத்துலகில் வாழும் மேற்றிராணிமார்களுடைய கருத்துக்களை அறியவும் கூடுமாயிருக்கிறது. அதே சமயத்தில் பற்பல நாட்டு மேற்றிராணிமார் நிறம், மொழி, பண்பாடு எல்லாவற்றிலும் வேறுபட்டிருப்பினும், வேத உண்மைகளில் ஒன்றுபட்டு, பிறர்சிநேகத்தினால் பிணைக்கப்பட்டுத் திருச்சபையின் தலைவரோடு ஒன்றித்துப் பொதுச்சங்கத்தில் கூடியிருக்கும் போது, கத்தோலிக்கரும் கத்தோலிக்கரல்லாதவரும் திருச்சபை எல்லா மக்களுக்கும்பொதுவானது; நாட்டுப்பற்று, மொழிப்பற்று எல்லாவற்றையும் கடந்து நிற்பது என உணருவார்கள்.

பொதுச்சங்கத்தின் தீர்மானங்களும் முடிவுகளும் திருச்சபைக்கே மிகமிக முக்கியமானவை. போதிக்கும் திருச்சபையின் நடபடிக்கைகள். ஆகையால், இச்சங்கத்தில் கலந்துகொள்ளும் அனைவரும் ஆராயும் பொருள்களை நன்கு தீர்க்க உணரவும், எடுக்கும் தீர்மானங்கள் திருச்சபைக்கு மிகப் பயன் தரக்கூடியவைகளாயிருக்கவும் அவர்கள் புத்திக்குத் தெளிவையும், ஞான ஒளியையும், மனதுக்கு வலிமையையும் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் அருளவேண்டுமென்று நாம் உருக்கமாய் மன்றாட வேண்டும்.

(திருஇருதய தூதனிலிருந்து எடுக்கப்பட்டது)

---

## கன்னியின் தியாகம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ருன். மரியா தனிமையிலிருப்பதை அறிந்தான். தன் கருத்தை நிறைவேற்றத் தக்க தருணமென உணர்ந்தான். மரியாவை அழைத்தான், தோல்வி அடைந்தான். குரோதங்கொண்டான், கொலை செய்தான்.

அசுந்தா நடந்ததைஅறிந்து அ[illegible]ளுள். ஊரார் ஆவேசங்கொண்டு அலெக்சாந்தரைத் தேடினர். அதிகாரிகள் அலெக்சாந்தரை 30 வருடச் சிறைக்கனுப்பினர். மரியா, தன்னைப் பழிவாங்கிய பாவியை மன்னித்துப் பரகதியடைந்தாள். தனது மரணத்தின் 50-ம் ஆண்டில் திருச்சபை மரியாவை, புனிதமரியாவாகப் பிரகடனப்படுத்தியது. தன் மகளின் புனிதபட்டத்துக்கு அவள்தாய் அசுந்தா ச[illegible]கமாயிருந்தாள். அலெக்சாந்தர், சிறைவாசம்முடித்துக் கார்த்தூசியன் மடத்தில் தபவாழ்க்கை நடத்துகிறான். என்னென்போம் தேவ வல்லமையை.

அர்ச். மரியா கொறற்றியே, கற்பின் பாதுகாவலியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

எவ். வீ. எவ்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உல்லாசவேளை — நமது நிருபர் அமலன்

# ஆளும் அழகிகள்

○ தொலைக்காட்சியில் பொதுச்சங்கம் ○ கத்தோலிக்கமும் நிறவேற்றுமையும் ○ பொதுவுடைமையும் எதிர்ப்பும்
○ நியூயோக் கண்காட்சி ○ கர்தினுல் ஸ்பெல்மன் ○ கிரேஸ்கெல்லி
○ பொலிவிய அழகி ○ மரிய தெரேசா ○ ஜாக்குலின் சீமாட்டி

அப்பா: வத்திக்கான் சங்கம் கூடும் நாள் நெருங்க நெருங்க, கத்தோலிக்கப் பத்திரிகைகளெல்லாம் அதுப்றியே அதிக செய்திகளை வெளியிடுகின்றன.

அம்மா: ஆமாம். இப்போது என்ன புதுச் செய்திகள் வெளியாகியுள்ளன?

பெரியண்ணு: இச்சங்கம் இராயப்பர் தேவாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். அங்கு நிகழும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தெலிவிஷன் என்றழைக்கப்படும் தொலைக்காட்சியில் வெளியிடுவார்கள். ஐரோப்பிய தேசங்களிலுள்ளவர்கள் எல்லாம் தங்கள் வீடுகளில் அமர்ந்தபடியே பொதுச்சங்கத்தின் முக்கிய நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கலாம்.

கார்மெலா: அப்படியானல் மற்றக் கண்டங்களில் இருப்பவர்களின் கெதி?

பெரியண்ணு: விசேட விமானங்கள் வத்திக்கான் சங்கம்பற்றிய தொலைக்காட்சிப் படச்சுருள்களை உடனுக்குடன் அமெரிக்கா போன்ற தூரதேசங்கட்குக் கொண்டு செல்லும். பின்னர், அங்கெல்லாம் தொலைக்காட்சியில் மக்கள் கண்டுகளிக்கலாம்.

அன்ரன்: தொலைக்காட்சி வசதியில்லாத எங்கள் நாட்டைப்போன்ற தேசங்களிலுள்ளவர்கள் என்ன செய்வது?

பெரியண்ணு: இங்கே சினிமாப்படமாளிகைகளில ஆங்கிலப்படங்களைத் திரையிடுவதற்கு முன்னுல் செய்திப் படங்கள் காட்டப்படுகின்றனவல்லவா? வத்திக்கான் சங்கத்தின் முக்கிய நிகழ்ச்சிகளை சினிமாப்படமாகத் தயாரிக்கப் பல செய்திப்பட நிறுவனங்கள் முன்வந்திருக்கின்றன. எனவே, எங்கள் படமாளிகைகளிலும் இச்சங்க நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ முடியும்.

அகஸ்ரின்: வத்திக்கான் சங்கத்தில் நடைபெறும் நிகழ்ச்சிளை உடனுக்குடன் பதிவுசெய்ய நவீன சாதனங்களான நாடாப்பதிவு இயந்திரங்களையும் தானே இயங்கும் தட்டச்சு இயந்திரங்களையும் உபயோகிப்பார்களாம். அத்துடன் சுருக்கெழுத்து, தட்டெழுத்து நிபுணர்களாக அவர்கள் தெரிந்தெடுப்போரில் இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, லத்தினிய அமெரிக்கா ஆகிய தேசத்தவர்களே அதிகமானேராவர்.

நிர்மலா: எனவே, வத்திக்கான் பொதுச்சங்க வேலைகளில் நிறவேற்றுமை சாகடிக்கப்பட்டுவிட்டதெனச் சொல்லுங்கள்.

அகஸ்ரின்: நிச்சயமாக. கத்தோலிக்கத் திருச்சபை நிறவேற்றுமையை எதிர்க்கிறது. அமெரிக்காவிலுள்ள ஒரு மேற்றிராசனத்தில் நீக்கிரோ பிள்ளைகளைக் கத்தோலிக்க பாடசாலைகளி ஒன்றில் அனுமதித்திருப்பதுபற்றி மிகப்பெரிய எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டபோதும் கத்தோலிக்கத் திருச்சபை வளைந்துகொடுக்கவில்லை. இந்த எதிர்ப்பில் முக்கிய பங்கு வகித்தவர்கள் மூன்று பிரபல கத்தோலிக்கர்கள். மூவரையும் அப்பகுதி மேற்றிராணியார் திருச்சபையினின்றும் நீக்கிவிட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அப்பா: நிறவேற்றுமை, சாதித்துவேஷம் ஆகியவற்றில் எங்கள் திருச்சபை வளைந்துகொடுக்கக்கூடாது. இந்த மேற்றிராணியாரைப்போல உறுதியாய் நிற்கவேண்டும். ஏனெனில், இன்றைய நிலையில் இந்த இரு பிரச்சினைகளும் கத்தோலிக்க கொள்கைகளை மற்றவர்கள் கேலிசெய்வதற்கு உதவியானவை. அத்துடன் பொதுவுடைமைவாதிகளிடையே தாழ்த்தப்பட்டோர் போய்ச் சேர்வதற்கும் காரணமானவை.

பெரியண்ணு: நீங்கள் பொதுவுடைமை என்றதும் கத்தோலிக்கக் கொள்கை என்ற சஞ்சிகையில் படித்த ஒரு கட்டுரை ஞாபகத்திற்கு வருகிறது.

அகஸ்ரின்: அமெரிக்கா என்ற அமெரிக்க தேசத்தின் தலைசிறந்த கத்தோலிக்க வாரப்பத்திரிகை நிறுவனத்தார் மாதமொருமுறை வெளியிடும் சஞ்சிகைதானே நீங்கள் கூறுவது?

பெரியண்ணு: ஆம். கத்தோலிக்கத்துக்கு எதிராகத் தத்துவம் பேசுவோருக்கு நல்ல விடையளிக்கும் சஞ்சிகை. இது பொதுவுடைமையை எப்படி எதிர்க்கலாம் என சித்திரை மாத இதழில் ஒரு நல்ல கட்டுரை வெளியாகியிருக்கிறது.

அஞ்சலா: எப்படி எதிர்க்கலாமாம்?

பெரியண்ணு: வெகு சுலபம். ஆயின், நாம் அதைச் செய்ய எம்மனம் இடம் கொடுக்காது. உதாரணமாகச் சில முறைகளைக் சொல்கிறேன். வீட்டு வேலைக்காரிக்கு நல்ல வேதனம் கொடு. உன் குடும்பத்தவரைப்போல அவளையும் எண்ணி, அவள் குடும்பத்தின் சில கஷ்டங்களையாவது தீர்க்கப் பிரயாசை எடு. தினசரி பத்திரிகை கொண்டுவரும் பையன் சாதாரணமானவன்தான். ஆயினும், அவனுடன் கடுகடுப்பாகப் பேசுவது ஏன்? வருங்காலத்தில் அவன் உன் நாட்டின் முதல்வனுக விளங்கக் கூடும். அப்போது உன்னைப்போன்ற சமூகத்தினரில் நீங்காத வன்மம் சாதிக்க முயல்வான். உனக்கா, தபால்களைச் சுமந்துவரும் அஞ்சற்காரனின் குடும்பநிலைபற்றி எப்போதாவது விசாரித்ததுண்டா? நீயும் அயலவர்களுமாகச் சேர்ந்து அவனுடைய பிரச்சினைகளில் சிலவற்றைத் தீர்க்கக்கூடாதா? இப்படியெல்லாம் வெகு சிறப்பாக விளக்கியிருக்கிறுர்கள் இக்கட்டுரையில்.

அன்ரன்: இவற்றை அனுசரிப்பதன் மூலம் பொதுவுடைமையை எப்படி எதிர்த்தொழிக்கலாம்?

அப்பா: எங்கே ஊழலும், லஞ்சமும் தாண்டவமாடுகிறதோ, பசியும் பட்டினியும் மக்களை ஆட்கொள்ளுகிறதோ, தொழிலாளிகளும் பாமரமக்களும் எங்கே பாதிக்கப்படுகிறுர்களோ அங்கே அத்தேசத்தில் பொதுவுடைமை வெகு இலகுவாகப் பற்றிக் கொள்கிறது. தபாற்காரர்களும், பஸ் கண்டக்டர்களும் மற்றும் தொழிலாளிகளும் சுகவாழ்வுவாழ்ந்தால் வேலை நிறுத்தங்களும், பயங்கர இயக்கங்களும் ஏன் தலைகாட்டுகின்றன. எனவே, நாம் எங்கள் அயலவர்களைச் சிறப்பாக ஈனத்தொழில் செய்பவர்களை அன்பாக நடத்தவேண்டியதவசியம்.

நிர்மலா: அமெரிக்காவில் வெளியாகும் பத்திரிகை என்றதும் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் ஒரு பெரிய பொருட்காட்சியைப்பற்றிய செய்தியொன்று என் ஞாபகத்துக்கு வருகிறது. நியூயோர்க் நகரில் 1964-ம் ஆண்டில் சர்வதேச பொருட்காட்சியொன்றை நடாத்துவதற்கு இப்போதே திட்டமிட்டுக் கருமமாற்றுகிறுர்கள். அப்பொருட்காட்சியில் கத்தோலிக்க கண்காட்சிப்பகுதியொன்றும் நிறுவப்படுமாம்.

பெரியண்ணு: கத்தோலிக்க பகுதியில் ஒரு சிறந்த ஓவியம் காட்சிக்கு வைக்கப்படவிருக்கிறதே தெரியுமா உங்களுக்கு?

கார்மெலா: என்ன சித்திரம் அது?

பெரியண்ணு: பிரபல நிபுணர் மைக்கல் அஞ்சலோவின் சிறந்த ஓவியம் அது. அவரது கையெழுத்தும் அச்சித்திரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ரோமையிலுள்ள இராயப்பர் மகாலயத்தில தற்போது அமைக்கப்பட்டுள்ளது இவ்வோவியம்.

இயூஜின்: உங்கள் பேச்சில் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். மிகவும் உணர்ச்சிகரமான சித்திரம் அது. ஒரு கலைஞனின் திறமையனைத்தையும் கொட்டி உருவாக்கப்பட்டது எனக் கூறலாம். ரோமைக்குச் செல்பவர்கள் இதைப் பார்க்காமலிருப்பதில்லை. லண்டனிலிருந்து வரும்வழியில் ரோமில் இரண்டுதினங்கள் தங்கினேனல்லவா. தவருமல் சென்று பார்த்தேன்.

அன்ரன்: சின்னத்தான் கொடுத்து வைத்தவர்.

பெரியண்ணு: ரோமைக்குச் செல்பவர்கள் மட்டுந்தானே இதுகாலவரை இந்த பிரபலம்வாய்ந்த கத்தோலிக்க சிற்பியின் திறமையைக் கண்டுகளித்தனர். நியூயோர்க் கண்காட்சியில் கத்தோலிக்க பகுதியில் இதை வைப்பதற்காகக் கர்தினுல் ஸ்பெல்மன் ஆண்டவர் பாப்பரசரின் அனுமதியைப் பெற்றிருக்கிறுர். ஒரு விசேட விமானத்தில் அமெரிக்க இத்தாலிய அரசாங்கங்களின் பாதுகாப்புடன் இவ்வோவியம் கொண்டுசெல்லப்படும். கத்தோலிக்க கண்காட்சிப்பகுதிக்குத் தலைமைதாங்கும் கர்தினுல் ஸ்பெல்மன் ஆண்டகை இவ்விதமாக எல்லாப் பார்வையாளர்களும் கத்தோலிக்கப்பகுதிக்குச் செல்வதற்கு வழிவகுத்திருக்கிறுர்.

அகஸ்ரின்: வாழ்ந்துகொண்டிருக்கும் சிறந்த அறிஞர்களான கத்தோலிக்கப் பெரியார்களில் கர்தினுல் ஸ்பெல்மனும் ஒருவர். கத்தோலிக்கப் பாடசாலைகட்கு அரசாங்க உதவி தேவையெனக் கத்தோலிக்க ஜனதிபதியான கென்னடியை எதிர்த்துப் பிரசாரம் செய்துவருபவர் இந்த மனிதர்.

அப்பா: இலங்கையில் சிலவருடங்கட்குமுன்னர் வெள்ளக்கஷ்டம் ஏற்பட்டதல்லவா? அப்போது கர்தினுல் ஸ்பெல்மன் ஆண்டவர் தமது நியூயோர்க் மேற்றிராசனத்தின் சார்பில் பெருந்தொகைப் பணத்தை வெள்ள நிவாரண வேலைகட்காகப் பிரதமர் பண்டாரநாயகாவுக்கு அனுப்பியிருக்கிறுர்.

இயூஜின்: உலகின் மிக அதிகமான செல்வம் வாய்ந்த கத்தோலிக்க மேற்றிராசனம் நியூயோர்க்தானும். எனவே, அம்மேற்றிராசனத்திலிருந்து இவ்வித உதவிகள் அனுப்புவது சுலபந்தான்.

அன்ரன்: நியூயோர்க் தேசத்திலிருந்து வெளியாகும் உலகப்பிரசித்திபெற்ற டைம் சஞ்சிகை இருக்கிறதல்லவா? சமீபத்தில் ஒரு இதழில் ஆளும் அழகிகள் என்ற தலைப்பில் தங்கள் தேசங்களில் முதலாவது சீமாட்டிகளாகவிருக்கும் எட்டு அழகிகளைப்பற்றிய விபரங்களைத் தெரிவித்திருக்கிறுர்கள். அவர்களில் நால்வர் கத்தோலிக்கர்கள்.

அஞ்செலா: யார் அந்த அழகிகள்?

அன்ரன்: முதலாவதாக அவர்கள் குறிப்பிடுவது மொனுக்கோ தேச அரசி கிரேஸ் கெல்லியை.

நிர்மலா: கிரேஸ்கெல்லி பழைய கொலிவுட் நடிகையல்லவா? மீண்டும் திரைப்படங்களில் நடிக்கப்போவதாகச் செய்திகள் வெளியாகியதே.

இயூஜியன்: மொனுக்கோ தேசத்தில் பணமுடை ஏற்பட்டதன்காரணமாக அரசவாழ்க்கைக்கு ஏற்படும் செலவைச் சமாளிக்க அரசி கிரேஸ் மீண்டும் நடிப்பாராம். ஆயினும், தற்போது இவ்வொப்பந்தம் ஒருவருட காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த அழகிக்கு நான்குவயதில் ஒரு மகனும் ஐந்துவயது நிரம்பிய மகளும் உண்டு.

அன்ரன்: அடுத்த அழகி மரிய தெரேசா எஸ்தன்சோரா. பொலிவிய ஜனுதிபதியின் துணைவி இவள். 7, 5, 3 வயதுகளில் பெண்குழந்தைகள் உண்டு. கத்தோலிக்க முறைதவருது அவர்களைப்பழக்கி வருகிருள் என டைம் சஞ்சிகை சிறப்பாகக் கூறுகிறது. ஓய்வுநேரத்தில் ஓவியம் எழுதுவதிலும், ஏழைக்குழந்தைகட்கான நிறுவனமொன்றை நிர்வகிப்பதிலும் செலவிடுகிருள்.

பெரியண்ணு: பிரேசிலின் அதிபர் ஜனியோ குவாத்ராஸ் உள்நாட்டு அரசியல் குழப்பங்களின் காரணமாக இராஜிநாமாச் செய்தபோது உதவி ஜனுதிபதி கோலாட் ஜனுதிபதியாக ஏகமனதாகத் தெரியப்பட்டார். குழப்பங்கள் மிகுந்த தம்நாட்டு அரசியல் பற்றி மனம்குழம்பிக்கொண்டிருந்த கணவருக்கு உற்சாகமூட்டி அனுப்பியவள் பிரேசிலின் முதலாவது சீமாட்டி மரிய தெரேசா கோலாட் ஆகும். கணவனுக்கு அரசியல் ஆலோசனைகள் அளிப்பதில் சிறந்தவள் இந்த அழகி. குடும்ப நிர்வாகத்தையும் தானே கவனிப்பதுடன் தனக்கும் கணவனுக்கும் குடும்பத்துக்கும் தேவையான ஆடைகளையும் தானே தயாரித்துக்கொள்கிருள்.

அன்ரன்: பெல்ஜிய தேச அரசி பபியோலா அடுத்த அழகி. பலகாலமாகப் பெல்ஜியதேசமக்கள் தங்கள் அரசருக்குத் திருமணமாகவில்லையே எனக் கொண்டிருந்த குறைநீக்கவந்தவள். ஸ்பானிய தேசத்தவள். முன்னர் கன்னிகையாக எண்ணித் தாதிப் பயிற்சி பெற்றவள். 1935-ல் தங்கள் நேச அரசி அஸ்ரிட் விபத்தொன்றில் மரித்தபின், பெல்ஜியதேசம் அரசியின்றியேயிருந்தது. மக்களின் அன்புக்குப் பாத்திரமான அரசி பபியோலா இன்னமும் தாயாகும் பாக்கியம் பெறவில்லை.

கார்மெலா: உங்கள் டைம் சஞ்சிகை ஜாக்குலின் கென்னடியை மறந்துவிட்டதா?

அன்ரன்: யார் சொன்னது? கென்னடியின் துணைவியைப்பற்றிக் கடைசியாகச் சொல்லலாமென நினைத்தேன். வெள்ளை மாளிகையைப் பார்வையாளருக்கேற்ற நூதனசாலையாக மாற்றியமைத்த பெருமை இவளுக்குண்டு. பத்தாவுக்கேற்ற பத்தினி என்ற சிறப்பைப்பெற்ற ஜாக்குலின்

[2-ம் பக்கம் பார்க்க]

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday July 8-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org